விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 17 புதன்கிழமை (30.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132

## ஐ.நா. தீர்மானத்தில் கூட்டமைப்பின் கடப்பாடு திருமலையில் இன்று கூடுகிறது கூட்டமைப்பு

(திருகோணமலை)

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஐ.நா. தீர்மானம் மற்றும் வடக்கு-கிழக்கில் அபகரிக்கப்படும் தமிழ்மக்களுக்கு சொந்தமான காணிகள் தொடர்பாக ஆராய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அவசரமாக திருகோணமலையில் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இன்று 30 ஆம் திகதி நகராண்மைக்கழக மண்டபத்தில் காலை 10 மணியளவில் கூடுகின்றது.

இந்தக்கூட்டத்தில்கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாண சபை அமைச்சர்கள், அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் அக்கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவினால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக்கடிதத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு-கிழக்கு பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இன்று 30 ஆம் திகதி திருகோணமலை நகராண்மைக்கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் முதலாவதாக தலைமையுரையினை அக்கட்சியின் தலை

19 ஆம் பக்கம் பார்க்க..

## முன்.போராளிகளுக்கு முன்னுரிமை தேவை

(யாழ்ப்பாணம்)

போராடப் புறப்பட்டதால் இன்று நடுத்தெருவில் விடப்பட்டுள்ள முன்னாள்போராளிகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள விவசாய அமைச்சு அலுவலகத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம

19 ஆம் பக்கம் பார்க்க..

# அரசியல் தலைவர்களை கொல்ல திட்டமிட்டிருந்தார் கோபி?



## கூறுகிறார் பேராசிரியர் ரொஹான்

(கொழும்பு) அண்மையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த கோபி என்றழைக்கப்படும் செல்வநாயகம் கஜீபன், நாட்டின் அரசியல் தலைவர்களை படுகொலை செய்ய திட்டமிட்டிருந்தார் என பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்த நிபுணராக கருதப்படும் பேராசிரியர் ரொஹான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## பெண் வேடத்தில் மறைந்திருந்த புலிச்சந்தேக நபர் கைது !

(கொழும்பு)

வவுனியா வைத்திய சாலையில் றைச்சாலைக் காவலர்களின் பாதுகாப்பின்கீழ்சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது தப்பிச்சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர் பெண்வேட மணிந்து வவுனியா நகரில் சுற்றித்திரிந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, குடியிருப்பு பிரதேசத்

19 ஆம் பக்கம் பார்க்க..



## வீதியில் வெளிப்பட்ட தண்ணீரால் யாழ்ப்பாணத்தில் நேற்று பரபரப்பு!

(யாழ்ப்பாணம்)

காப்பெற் வீதியில் திடீரென வெளிப்பட்ட தண்ணீரினால் யாழ்ப்பாணத்தில் நேற்று பெரும்பரபரப்பு ஏற்பட்டதோடு யாழ்.மாநகர சபையிடம் 2 கோடி ரூபாய் நட்ட ஈடு கோரி முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை காப்பெற் வீதியில் ஏற்பட்ட வெடிப்பின் ஊடாக நீர் வெளிப்பட்டதனால் அவ் வீதியின் ஊடான வாகனப்போக்கு வரத்தும் நேற்றுக் காலை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.ஆரியகுளம் சந்திக்கு அருகில் பலாலி வீதியில நேற்றுக்காலை 10, மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து

19 ஆம் பக்கம் பார்க்க..



### மன்னாரில் வைக்கப்பட்டிருந்த
## 81 மனித எலும்புக் கூடுகள் அனுராதபுரம் அனுப்பப்பட்டன

(திருக்கேதீஸ்வரம்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 81 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் நேற்று மன்னார் பொது வைத்தியசாலையில் இருந்து மேலதிக பரிசோதனைகளுக்காக அனுராதபுரம் மாவட்ட பொது வைத்திய

20 ஆம் பக்கம் பார்க்க..

## காணாமல்போன விமானத்தின் உடைந்த பாகங்கள் கண்டுபிடிப்பு !

### ஆஸி கடல்சார் ஆய்வு நிறுவனம் தகவல்

(கோலாலம்பூர்)

மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் இருந்து 239 பயணிகளுடன் சென்று மாயமான மலேசிய விமானத்தின் உடைந்த பாகத்தினை வங்காள விரிகுடா கடல் பரப்பில் கண்டுபிடித்துள்ளதாக அவுஸ்திரேலியாவின் கடலாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 8-ம் திகதி மலேசியன் எயார்லைன் விமானம் மாயமானது. இந்த விமானம் இந்திய பெருங் கடலின் தெற்குப்பகுதியில் விழுந்து நொறுங்கியதாக கருதப்படுவதால், பல்வேறு நாடுகளின் கப்பல்கள் இந்த பகுதியில் தீவிர




தேடுதல்வேட்டையில் ஈடுபட்டுள்ளன.

விமானம் மற்றும் அதன் கறுப்பு பெட்டியை தேடும்பணியில் அமெரிக்காவின் புளூபின்-21 என்ற நீர்மூழ்கி ரேவும் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

20 பக்கம் பார்க்க..

மலரும் மங்கலகரமான ஜய வருடம் வைகாசி மாதம் 1ம் திகதியில் (01.05.2014)
அக்ஷய திருதியை முன்னிட்டு
யாழ்ப்பாணம்
ஸ்ரீ தேவி கருமாரி நகைமாடத்தின்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களே!
இத்திருநாளிலே சகல ஐஸ்வர்யங்களும் பெருகி, செல்வம் கொழிக்க
நீங்களும் உங்கள் இல்லங்களுக்கு
தங்க நகைகளை வாங்கிச் செல்லும்போது
எமது அன்புப் பரிசில்களையும் எடுத்துச் சென்று மகிழ்ந்திடுங்கள்
● பொன்னுக்கு பெண் அழகு ● பெண்ணுக்கு பொன் அழகு
ஸ்ரீ தேவி கருமாரி நகைமாடம்
83/1, கஸ்தூரியார் வீதி, (செம்மா தெரு) யாழ்ப்பாணம்.
(C-7213)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு நூல்களின் வெளியீடும் அறிமுகமும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியின் இல. 408 விரிவுரை மண்டபத்தில் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் இரு நூல்களின் வெளியீடும் அறிமுகமும் நடைபெறவுள்ளது. இந்திய மானிடவியலாளர் முனைவர் பக்தவத்சல பாரதியினால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட, பேராசிரியர் என். சண்முகலிங்கனின் ஆங்கில ஆய்வேடான துர்க்கையின் புதியமுகம்; யாழ்ப்பாணத்தில் சமயம், வழிபாடு, மாற்றங்கள் என்ற நூலும் இ. இராஜேஸ்கண்ணனின் கிராமிய – கல்வி – பண்பாடு : சமூகவியல் பார்வைகள் என்ற நூலும் சமூகவியல் துறையின் சமூகவியல் சமூகத்தினரால் வெளியிடப்படவுள்ளன.

சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையினை சமூகவியல் சமூகத்தின் தலைவி இ. வத்சலாவும் நூல்களுக்கான அறிமுகவுரைகளை சமூகவியல் சமூகத்தைச் சேர்ந்த சு. கோபிகா, இ. சதீஸ்குமார் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

நூல் நயப்புரைகளை முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களும், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவரும் கல்வியியல் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி த. கலாமணி அவர்களும் ஆற்றவுள்ளனர். ஏற்புரையினை நூலாசிரியர்களில் ஒருவரான சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தவுள்ளார். (ந)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறோயிலர் குஞ்சுகள், சிவப்பு, வெள்ளை, பேட்டுக்குஞ்சுகள் நியாய விலையில் 06.05.2014 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறோயில் கோழி உடன் பணத்துக்கு கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்டர்**
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர் யாழ்.

**சுட்டி பாம் சென்டர்**
வட்டுக்கோட்டை.

(C-7210)

**குறிப்பு : முன்கூட்டியே பதிவு செய்யவும்**



## நவாலியூர் அருள்மிகு களையோடை கண்ணகி அம்மன் திருப்பணிச் சபையினரின் அறிவித்தல்

அம்பாள் அடியார்களே!

கும்பாபிஷேகம் முடிவுற்றபின் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் மிகுதி வேலைகள் செய்வதற்கு தங்களால் இயன்ற பொருள், பண உதவிகள் செய்யுமாறும் அத்தோடு ஆலயத்தில் உள்ள பழைய பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். **11.05.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

சகலரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்வதோடு, இப்பொருள்களை ஆலயத்தில் **01.05.2014 தொடக்கம் 10.05.2014 வரை** பார்வையிடலாம் எனத் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

**திருப்பணிச் சபையினர்**
**களையோடை கண்ணகை அம்மன்**
**தேவஸ்தானம், நவாலி.**

(C-7218)



## University Of Jaffna, Sri Lanka

Faculty of Management Studies & Commerce

**DIPLOMA IN MARKETING MANAGEMENT – 2014**

Applications are invited from eligible candidates for registration of the above course to be conducted by the Faculty of Management studies & Commerce.

Duration of the Course - One Year (Weekends)
Medium of Instructions - Tamil
Admission Requirements - Candidate must possess three passes in G.C.E (A/L) Examination.

Fees - Programme Fee will be Rs. 29,000/-
**Including:**

| | |
|---|---|
| **Registration** | **- 1,500.00** |
| **Tuition Fees** | **- 22,500.00** |
| **Examination Fees** | **- 5,000.00** |
| **TOTAL** | **- 29,000.00** |


Closing Date of Application - 25.05.2014
Application Forms -

Application form could be obtained from the Assistant Registrar, Admission Branch on a payment of Rs.250.00 at the Shroff Counter or at People's Bank – Jaffna University Branch. Duly filled application should be forwarded on or before **25.05.2014** to the **Assistant Registrar, Admission Branch, University of Jaffna.** Please write **"Application for Diploma in Marketing Management"** on the top left side of the envelop.

Registrar
University of Jaffna

(C-7215)


## மரண அறிவித்தல்



### கனகசபை சுப்பிரமணியம்

**(செல்லையா அண்ணா)**

- (முன்னாள் அலுமினியம் தொழிற்சாலை ஊழியர்)

போயிட்டியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி வடக்கு 8ஆம் வட்டாரத்தை புகுந்த இடமாகவும், இடம்பெயர்ந்து கோண்டாவில் நெட்டிலிப்பாயில் வசித்து தற்போது பன்னாலையில் வசித்து வந்தவருமாகிய கனகசபை சுப்பிரமணியம் நேற்று (29.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் போயிட்டியை சேர்ந்த காலம் சென்றவர்களான கனகசபை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும் மயிலிட்டியை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் தங்கரத்தினத்தின் (பவாக்கர்) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீ ரஞ்சன் (முன்னாள் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்) மற்றும் சயந்தன் (ஆசிரியர் - யா/ அருணோதய கல்லூரி, முன்னாள் பிரதி அதிபர் யா/மகாஜனக் கல்லூரி, மெய்யியல் அளவையியல் விரிவுரையாளர் புதிய உயர் கல்லூரி யாழ்ப்பாணம்), ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), ஜெயந்தன் (ஆசிரியர் யா/ கோண்டாவில் - பரஞ்சோதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசக்தி (ஆசிரிய ஆலோசகர் 2ஆம் மொழி - சிங்களம் - வலிகாமம் கல்வி வலயம்), சூரியகலா (பிரான்ஸ்) பவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிராம், அபிசயனி, அபிசரண், திவ்யா, சௌமியா, ஜீவேஸ், கிருண்யா, ஆரகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 'சிவபதி' பன்னாலை தெல்லிப்பழை இல்லத்தில் (ஆசிரியர் சயந்தன் இல்லம்) இன்று 30.04.2014 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்,
மனைவி, பிள்ளைகள்
சு. தங்கரத்தினம் (பவாக்கர்)
சு. சயந்தன்
சு. ஜெயரஞ்சன்
சு. ஜெயந்தன்

'சிவபதி'
பன்னாலை,
தெல்லிப்பழை.
தொ.பேசி. 0212059701
0718474684

(6264)




**அக்ஷய திருதியையாம் இந் நன்நாளில் ஹரனில் தங்கம் வாங்கி தங்கமான உறவைப் பெற்றிடுவீர்...**



# ஹரன் ஜுவல்லர்ஸ்

## நகை – வைர வியாபாரிகள்

இல. 217, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

217, Power House Road,
Jaffna, Sri Lanka.

(C-7219)

# Haran Jewellers

since 1970

email: haranjewellers@gmail.com

021 222 6083
071 418 2480
Skype : jfharan


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புக்களுக்கு தடை; பதில் நடவடிக்கை எடுங்கள்

## கனடாவை கோருகிறது கனேடிய எதிர்க்கட்சி

இலங்கை அரசாங்கம் புலம்பெயர் அமைப்புகளை தடைசெய்தமைக்கு பதில் நடவடிக்கை எடுக்குமாறு கனடாவின் வெளி விவகார அமைச்சரான ஜோன் பயர்ட்டை அந்த நாட்டின் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி கோரியிருக்கின்றது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான போல் டிவர் மற்றும் ராதிகா சிற்சபேசன் ஆகியோர் இவ்விடயம் தொடர்பாக கனேடிய வெளிவிவகார அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை வரைந்துள்ளனர். அக்கடிதம் வருமாறு,

இந்தத் தடை கனடாவில் செயற்படும் சில அமைப்புகள் இலங்கையில் சில நிறுவனாங்களுக்கு உதவி, அவற்றுடன் கூட்டுச் சேர்ந்து செயற்படுகின்றமையைப் பாதித்துள்ளது என்றும், களத்தில் பணியாற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் சிவில் யுத்தத்தின் போது இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வரும் அமைப்புகளை விசேடமாக இலக்கு வைத்தே இந்தத் தடை அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்று முடிந்த ஐ.நா. மனிதவுரிமைகள் கவுன்ஸிலின கூட்டத்தில் இலங்கை தொடர்பான தீர்மானம் எடுப்பதற்காகக் கடுமையாக உழைத்து உதவிய இரு கனேடிய நிறுவனங்களும் இந்தத் தடைப் பட்டியலில் அடக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடை இலங்கையில் களத்தில் உள்ள ஏனைய அமைப்புகளுடன் இந்த இரு அமைப்புகளும் இணைந்து பணியாற்றுகின்றமையைத் தடுக்கின்றது. அத்தோடு களத்தில் மனிதவுரிமைகளுக்காகச் செயற்படும் ஆர்வலர்களின் பணியையும் முடக்குகின்றது.

கனடாவில் இந்த அமைப்புகள் தங்கள் இணை அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதையும் நிதி சேகரிப்பதையும் கூட இந்தத் தடை பாதிக்கக்கூடியது. மேலும் இந்தத் தடை கனடா வாசிகள் உட்பட பல தனிநபர்களையும் அடையாளப்படுத்தி குறி வைத்துள்ளது.

இது, கனடா பிரஜைகளின் தனிமைக்கான சுதந்திரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் அத்துமீறல் என நாம் கருதுகின்றோம்."

"இலங்கையின் இந்த நடவடிக்கை ஜனநாயக விரோதமானது.ஏற்றுக் கொள்ள முடியாதது .பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளை சிறுமைப்படுத்துவது. அதனால் கடுமையான வார்த்தைகளினால் அது கண்டிக்கப்பட வேண்டும்.

அத்தகைய கண்டனம் மட்டும் கூடப் போதுமானதல்ல. சர்வதேச சமூகக் கட்டமைப்புகள் தொடர்பாகத் தான் எடுத்த முடிவை மாற்றியமைக்கக் கூடியதான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு தரத்தக்க விதத்தில் கடுமையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் விசாரணை மற்றும் அதற்கான செயற்பாடுகளை பாதிக்கச் செய்யும் விதத்தில் இலங்கை முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு கனடா எப்படிப் பதிலடி மேற்கொள்ளப் போகின்றது என்பது குறித்து எங்களுக்கு விளக்கம் தாருங்கள்.

விசேடமாக இலங்கையில் மனித உரிமை மீறல், துஷ்பிரயோகங்கள் மற்றும் அடக்குமுறை நடவடிக்கைகளுக்குக் காரணமான தனியாட்களை இலக்கு வைக்கும் விதத்தில் தடைகளை விதிக்க கனடா அரசு பரிசீலிக்கின்றதா? அல்லது வெளிவிவகாரத்துக்கான நிலையியல் குழு 2009 இல் பரிந்துரை செய்த மாதிரி நிதி மற்றும் இராஜதந்திரத் தடைகளை விதிக்க விரும்புகிறதா?

அத்தோடு கிரிமினல் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கனடா பிரஜைகளுக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டமை தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்க உள்ளீர்கள் என்பதையும் தெரியப்படுத்துங்கள்! இப்படி அந்தக் கடிதத்தில் இரண்டு எம்.பிக்களும் கனடா அரசைக் கோரியிருக்கின்றனர். (2)

# பஹ்ரைனுக்கும் இலங்கைக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

பஹ்ரெய்னுக்கும் இலங்கைக்கும் இடையில் சில புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.பஹ்ரெய்னுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பஹ்ரெய்ன் மன்னர் அஹமட் பின் இசா அல் காலீபா வைச் சந்தித்துள்ளார்.

அல் சாகீர மாளிகையில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது. கல்வி, கலாசாரம் மற்றும் கலை ஆகியன தொடர்பில் சில புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பஹ்ரெய்னுக்கு இலங்கை அரச தலைவர் ஒருவர் விஜயம் செய்த முதல் தடவை இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

இரு தரப்பு உறவுகள் குறித்து இரு நாடுகளினதும் தலைவர்கள் விரிவாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பிராந்திய வலயத்தின் ஸ்திரத்தன்மைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறந்த முறையில் பங்களிப்பு வழங்கியுள்ளதாக பஹ்ரெய்ன் மன்னர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பஹ்ரெய்ன் அரசாங்கத்தினால் வழங்கப்படும் அதி உயர் காலீபா விருது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள வழங்கிய பங்களிப்பினை பாராட்டும் வகையில் இந்த விருது வழங்கப்படுவதாக பஹ்ரெய்ன் மன்னர் தெரிவித்துள்ளார்.இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படு த்திக்கொள்ள விரும்புவதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

1940ஆம் ஆண்டு முதல் தடவையாக இந்த விருது வழங்கப்பட்டது. 1970ஆம் ஆண்டு முதல் சீரான முறையில் விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது.

சவுதி மன்னர், மலேசிய பிரதமர், இரண்டாம் எலிசபத் மஹாராணி உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

மறைந்த மன்னர் சேக் இசாபின் சல்மான் அல் காலீபா, மனிதாபிமானத்திற்கு வழங்கிய உன்னத சேவையை போற்றும் நோக்கில் காலீபா விருது வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பஹ்ரைனில் வசிக்கும் இலங்கையர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புக்கள் பீடம்

### புதிய அனுமதி
### கல்வியியல் முதுமாணி -2014/15 (அணி XI)

மேற்படி சுய நிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**1. அனுமதிக்குரிய தகைமைகள்**

☆ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும் அத்துடன்

☆ ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு அனுபவம்.

**2. தெரிவு முறைமை:**

எழுத்துத் தேர்வும் நேர்முகத் தேர்வும்

(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்)

கற்கைக் காலம்: ஒரு வருடம்

மொழி மூலம்:- தமிழ்

கற்கைநெறிக் கட்டணம்:- 75,000/-

விண்ணப்பப் படிவக் கட்டணம்:- 1000/-

விண்ணப்பப் படிவம் பெறும் முறை:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தை செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்ப படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23×10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை *www.jfn.ac.lk* எனும் பல்கலைக்கழக வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக் கொள்ளலாம். வலைத்தளமூலமாக பிரதியெடுக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை/ மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ***கல்வியியல் முதுமாணி 2014/15 விண்ணப்பம்*** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 30.05.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

(சி-7215)


# இராசி பலன்

**30.04.2014**

(சித்திரை 17, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

பிரதமை முற்பகல் 11.55 மணிவரை

பரணி முற்பகல் 9.49 மணிவரை

இராகுகாலம் 11.58-01.28 மணிவரை

சுபநேரம் 4.28-5.58 மணிவரை

சித்தாமிர்தம், கார்த்திகை விரதம்

வளவன்

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பக் கவலைகள் ஏற்படலாம், எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மேடம்:** வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**இடபம்:** பிதா சிந்தையுண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் கூடும்.

**மிதுனம்:** தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்கள் தகுதியை உயர்த்தும்.

**கும்பம்:** சுதந்திரமாகச் செயற்படும் நாள், வியாபார விருத்தியுண்டு, குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையைக் கேட்டு நடக்க முன்வருவர், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உற்சாகமான நாள், பிறர் உதவியுண்டு.

**மகரம்:** கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், பயந்த சுபாவமுண்டு, வாகன யோகமுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** சொத்துப் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காண நினைப்பீர்கள், மறைமுக போட்டிகளை சமாளிப்பீர்கள், தேவையற்ற அச்சங்கள் உருவாகும், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்

**தனுசு:** பொன்னான எதிர்காலத்தை அமைக்க புதிய வழி பிறக்கும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**விருச்சிகம்:** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், பகைவர்கள் விலகுவர், தொழிலில் முன்னேற்றமான மாற்றங்கள் நிகழலாம், பொருளாதார நிலை உயரும்.

**துலாம்:** விட்டுக்கொடுத்து நடப்பதால் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** நீங்கள் விசுவாசமாக நினைத்த நபர் உங்கள்மீது குறைகண்டு கூறலாம், பிரயாண பயமுண்டு, உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்து மாணவர்கள் நேற்று கண்டனப் போராட்டம்




இதனால் அப்பகுதியில் நேற்றுக காலை 8.30 மணிமுதல் முற்பகல் 10.30 மணி வரை பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு பொலிஸாரும் குவிக் கப்பட்டிருந்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நுழைவாயிலுக்கு முன்பாக இருக்கும் கொக்குவில் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) ஆலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறறு வருவதால் ஆலய நிர்வாக ததினர் ஆலயத்தின் வெளி வீதியினை தடை செய்திருந்தனர்.

எனினும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் பிரஸ்தாப ஆலய

ஆலய நிர்வாகத்தினர் பாதையை மறித்ததற்கு எதிர்ப்புத்தெரிவித்து யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்கள் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு வீதியை மறித்து போடப்பட்டிருந்த கல்லுகள், இரும்புக்கதவுகள் என்பனவற்றை தூக்கி, எறிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

பரிபாலன சபையினருக்கும் இடையே குறித்த பாதை தொடர்பில் சர்ச்சை நீடித்து வருகின்ற நிலையில்நேற்றைய தினம் மாணவர்கள்வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டதுடன் வீதி தடைகளையும் தூக்கி எறிந்துள்ளனர். இதன் காரணமாக அபபகுதியில் சில மணி நேரம் பதற்றம் ஏற்பட்டது. (ந-6)




# உறக்கத்தில் இருந்த தம்பதியினர் மீது திருடர்கள் வாள்வெட்டு

## இருவர் தப்பியோட்டம்; ஒருவர் மாட்டினார்

(கரணவாய்)

வீட்டில் உறங்கிய நிலையில் இருந்த தம்பதியினரை திருடர்கள் வாளால் தாறுமாறாக வெட்டியதில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட இடமான நாகர் கோவில் மேற்கு மாணிக்கபிள்ளையார்கோவில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அந்தோனி முத்து கமலதாசன் (வயது 35), மனைவி க.தேவமாலினி (வயது 35) ஆகியோரே வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த வீட்டில் மூன்று திருடர்கள் திருட்டு முயற்சியின் நிமிர்த்தம் உள்நுழைந்தனர்.

இதேவேளை உறங்கிக் கொண்டிருந்த தம்பதியினரை தாறு மாறாக வாளால் வெட்டியுள்ளனர்.

வெட்டுக்காயங்களுக்கு உட்பட்ட தம்பதியினர்உரத்தசத்தமிட்டுள்ளனர்.

தம்பதிகள் சத்தத்தினை கேட்ட அயலவர்கள் சம்பவ இடத்திற்கு ஓடி வந்து திருடர்களைபிடிப்பதற்கு முயன்றனர்.

இந்நிலையில் இரு நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

ஒரு நபர் அயலவர்கள் கையில் மாட்டியதில் பலத்த காயங்களுக்கு உட்பட்டுள்ள நிலையில் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-60)

## உழவர் சந்தை திறப்பு விழா இன்று

சாவகச்சேரி நகர சபையின் சந்தை வளாகத்தில் உழவர் சந்தை இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளையினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுமார் 8 இலட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட குறித்த கட்டடத்தில் உற்பத்தியாளர்கள் தமதுஉற்பத்திகளை தரகர்களின் தலையீடுஇன்றிவிற்பனை செய்ய முடியும்.

உற்பத்தியாளனின் வேண்டுகோளுக்கு இணங்க இச் சந்தை ஆரம்பிக்கப்பட்வுள்ளது. (2-29)

# வரட்சி மூகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு

யாழ்.மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றம் காரணமாக வெப்ப நிலையானது தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது.

இதன் விளைவாகபயிர்ச்செய்கைத்துறை எதிர் நோக்கும் சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கக் கூடிய பொருத்தமான தீர்வு காணும் செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன சுற்றாடல் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இச்செயலமர்விற்கு ஆர்வமுள்ள விவசாயிகள்,பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள், விவசாயத்துறை சார்ந்த விற்பனையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், விவசாய ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பிரதி விவசாய பணிப்பாளர் கிசிறிபாலசுந்தரம் அறிவித்துள்ளார். (2)

# காணி பிணக்குகளை தீர்க்க நீதிமன்றங்களை நாட வேண்டிய நிலை

## வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

வடமாகாணத்தில் காணி சம்பந்தமாக எழுந்துள்ள பிணக்குகளுக்கு தீர்வு காண நீதிமன்றங்களை நாடவேண்டியுள்ளது எனத தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின முதலமைச்சர் சிவிவிக்னேஸ்வரன் காணிப்பிரச்சினையானது பெரும் பிரச்சினையுாக உருவெடுத்துள்ளது என்றும் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாகவும் உள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் யாழ்.பொதுநூலக வளாகத்திலுள்ள மாகாண அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற காணிசம்பந்தமான கலந்துரையாடலையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில,

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை காணிப்பிரச்சினை என்பது தீர்க்கப்பட முடியாத பெரும் பிரச்சினையாக தொடர்ந்து கொண்டு செல்கின்றது. கடந்த காலப் போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் இந்தக் காணிப்பிரச்சினையை தீரக்கப்படமுடியாத மேலும் சிக்கல்களை ஏற்படுத்திவிட்டது. இதேவேளை தீர்வுகள் எட்டப்படமுடியாத காணிப்பிரச்சினைகளுக்கு நீதிமன்றங்களின் ஊடாக தீர்வுகாணும் நோக்குடன் வழக்கு போடுவது எனத்தீர்மானித்துள்ளோம்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்களின் இடங்கள் தெரியாமல் வேறு இடங்களில் சென்று குடியேறுகின்றனர். அதேவேளை அரச தரப்பினரும் மக்களை குடியேற்றுகின்றனர். இப்படியே காணிப் பிரச்சினை என்பது தொடர்ந்து கொண்டு செல்கின்றது. அதே வேளை இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் காணிகளுக்கு சென்று மீள்குடியேறிவாழ முடியாத நிலையும் உள்ளது. அத்தோடு ஒரு காணிக்கு இரண்டு மூன்று பேர் உரிமை கோரும் போது யாருக்கு அந்தக்காணி சொந்தம் என்பதில் பிரச்சினை எழுந்துள்ளது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் காணிகள் எவ்வாறு பகிரப்படுகின்றது என்பது தொடரபாக மாகாண காணி ஆணையாளர் விளங்கப்படுத்தினார். இருப்பினும் காணிப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்படவில்லை. வடக்கிலுள்ள அரச காணிகளை யார்குத்தகைக்கு கொடுக்க முடியும் மத்திக்கா. மாகாணசபைக்கா அந்த அதிகாரம் உள்ளது என்பது குறித்து நீதிமன்ற தீர்ப்புகளும் உள்ளதால் அவைகளும் கருத்தில்எடுக்கப்பட வேணடியுள்ளதுஎன அவர்மேலுமதெரிவித்தார்.(2-6)

# கொற்றாவத்தை பகுதிமக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டிதொகுதி கொற்றாவத்தையில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனுடனான மக்கள் சந்திப்பு கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையத்தில் அதன் தலைவர் இ.திலீபன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

மக்கள் தம்பகுதியில் நிலவும் பல பிரச்சினைகள் பற்றிய கோரிக்கைகளை முன்வைத்தனர். இதில் முக்கிய பிரச்சினையாக வீதிப்பிரச்சினை, அமெரிக்கமிஷன் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர் இடமாற்றங்களில் நிலவும் பாகுபாடுமுறை என்பன பற்றிக் குறிப்பிட்டார்கள்.

பதிலளித்துப் பேசிய மாகாண சபை உறுப்பினர் இவ்விடங்களை எமது முதலமைச்சர், போக்குவரத்து அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றேன். எங்களால் பலதடைகளின் மத்தியில் முழுமையான தீர்வுகளை எட்ட முடியாவிட்டாலும் எம் சக்திக்குட்பட்ட வகையில் தீர்வுகளைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றேன் எனக் குறிப்பிட்டார்.

இம்மக்கள் சந்திப்பில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபை உறுப்பினர் அ.ஜோன் ஜிப்றிக்கோ சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் அவ்வூரைச் சேர்ந்த டாக்டர்.க.வேலும்மயிலும், சி.பபாலன், செ.செல்வாஜ்சன் உள்ளிட்டோர் கலந்து கொள்வர். (2-6)




## மாகாண மட்டத்தில் இரண்டாமிடம்

(மானிப்பாய்)

யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கலைப்பிரிவில் கல்வி பயில்கின்ற மாணவன் சசிதரன் சித்திரப் பொட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார்.

இம்மாணவனுக்கான கௌரவிப்பும் விருது வழங்கலும் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சித்திரத் துறையின் மீது பேரார்வம் உடைய குறித்த மாணவன் பல போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களினை பெற்றுக் கொண்டதுடன் ஒருவரினை பார்த்து அப்படியே வரைவதில் சிறப்புடையவராக விளங்குகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-21-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கல்விவலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் விரைவில் வெற்றிடமாகவுள்ள யா/ இமையாணன் அ.த.க பாடசாலைக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதிபர் ஆசிரியர்கள் குறித்த பாடசாலைக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.விண்ணப்பதாரி கொண்டிருக்க வேண்டியகல்வித்தகைமைகளாக

இலங்கை அதிபர் சேவையில் தரம் 2- II இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I ற்கு மேற்பட்ட தரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபர் கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும் .விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்க ளது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக் கப் பெறாத பட்சத்தில் மாத்திரம் ஆசிரியர் சேவையை சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்று எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்விற்கு தோற்றுதல் வேண்டும். தேவையேற்படின் எழுத்துப்பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும் என வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் கேட்டுள்ளார். (அ)

# மஹோற்சவ கால ஆன்மீக உரைகள்

புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு மேற்படி ஆலய நிர்வாக சபையினரும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்தும் மஹோற்சவ கால ஆன்மீக உரைகள் தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை ஆலயத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு மதி.தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடை பெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று 30 ஆம் திகதி புதன் கிழமை இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை ஆலய வழிபாட்டு முறை எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரன் உரை நிகழ்த்துவார்.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை திருவிளையாடல் எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரன் அதனைத் தொடர்ந்து 8 மணி தொடக்கம் 9 மணி வரை திருவருள் எனும் தலைப்பில் நி.பகீதரன் ஆகியோரின் உரைகள் இடம் பெறவுள்ளன. (2)

# பஸ் கம்பனிகளின் இணைய அலுவலக முகவரியில் மாற்றம்

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய அலுவலகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் இல.191, முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கவுள்ளது.

இதற்கமைய அலுவலக தேவைகளுக்கு குறித்த முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அதன் தலைவர் பொது மக்களை கேட்டுள்ளார்.குறித்த கம்பனி முன்னர் யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி எனும் முக வரியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# தபால் கட்டணங்கள் உயர்த்தப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் மாதத்திற்குள் தபால் கட்ட ணங்களில் திருத்தம் செய்யப்படவுள்ளதாக தபால்மா அதிபர் ரோஹண அபேரட்ன தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தபால் கட்டணத் திருத்தம் குறித்து ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பி ட்டுள்ளார்.அமைச்சரவையின் அனுமதி கிடைத்த தன்பின்னர் புதிய தபால்கட்டணங்கள் குறித்து அறி விக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (2)


# மரண அறிவித்தல்



## செல்வன் இராசநாதன் பிரதீபன்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இராசநாதன் பிரதீபன் 26.04.2014 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராசநாதன் மற்றும் மதிமலரின் புதல்வனும் அரவிந்தன் (கனடா), அர்ஜின் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.05.2014 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக 10 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.36,
மெமோறியல் வீதி,
மானிப்பாய்.

(6259)

தகவல்:-
தாய் (மதிமலர்)
0750663419

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திதி:30.04.2014

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் (மொந்திரோவை)
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் வேலுப்பிள்ளை நடராசா (பாலசுந்தரம்)

முன்னாள் ப.நோ.கூட்டுறவுச் சங்க முகாமையாளர்,
முன்னாள் மண்டைதீவு கிராம சபை அங்கத்தவர்.

இறைவனடி சேர்ந்து ஈராண்டு காலமாகிவிட்டதய்யா
நாம் சேர்ந்திருந்த காலங்களின் செழுமைகளை நினைத்தே
காலம்தனை கழிக்கின்றேன்
வாழ்நாளில் நாம் வசந்தமாய் வாழ்ந்திடவே
வழி அமைத்து வைத்தீரே...
உம்மைப் பிரிந்து உருகுகின்றோம் அப்பா ஆண்டு இரண்டாக...
பிள்ளைகள் போல் எம்மை பாசத்துடன் அரவணைத்த பாசமிகு மாமாவே...
இரண்டாண்டு காலம் உருண்டோடி விட்டதே உமைப்பிரிந்து
காலம் முழுவதும் நாம் களிப்புடனே வாழ்ந்திட வேண்டுமென...
எண்ணிய எம் தாத்தாவே எங்கேநீர் சென்றீரோ! ஈராண்டு காலம்
ஆண்டிரண்டு சென்றாலும் நீங்காது உம் நினைவுகள்
எம் நெஞ்சம் உள்ளவரை... உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

அன்னையின் மடியில்
12.04.1927

ஆண்டவன் அடியில்
22.04.2012

தகவல்:- மகன் பாலேந்திரா
(ராசன், சுவிஸ்) 021 9641637

(சி-7212)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் நிர்வாக முறைகேடு எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் நிர்வாக முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களான எதிர்க்க்ட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர். இருப்பினும் இந்தக்குற்றச்சாட்டை ஏற்க மறுத்த ஆளும்தரப்பினர் நியமனம் வழங்குவதில் எந்தவிதமான முறைகேடும் இடம்பெறவில்லை என்றும் வாதிட்டனர்.

யாழ்.மாநகரசபையின் 4 ஆவது மாதாந்தப்பொதுக்கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது இதன் போதே எதிர்க்கட்சி உறுப்பினரான என்.ராஜதேவன் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

தற்காலிக ஊழியர்களாக பணியாற்றிவந்த 87 பேருக்கு நேற்று முன்தினம் மாநகரசபையில் வைதது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இந்த நியமனம் வழங்குவதில் ஆளும் தரப்பினர் நிர்வாக முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர். மாநகரசபையின் நேர்முகத் தேர்வில் பங்கு பற்றியதோடு 3 வருடங்களாக யாழ்.மாநகரசபையில் வேலைசெய்தவர் என்று ஆணையாளரினால் சிபார்சு செய்யப்பட்டவருக்கும் கூட நிரந்தரநியமனம் வழங்கப்படவில்லை.

ஆனால் நேர்முகத்தேர்வுக்கு வராதவர்களுக்கும் இங்கு பணியாற்றாதவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று குற்றம்சாட்டினார்.

இதனையடுத்து உறுப்பினர் ராஜதேவனின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த ஆணையாளர் செ.பிரணவநாதன் கூறுகையில், இங்கு வேலை செய்யாதவர்களும் உள்வாங்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. அதே வேளை நியமனம் வழங்குவதில் எந்தவிதமான அரசியல் தலையீடும் இல்லை.

அதேவேளை இந்த ஊழியர்களுக்கான் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முதல்வர்தான் முக்கிய காரணமானவர். வடக்கு மாகாண ஆளுநருடன் நீண்ட நேரம் கலந்துரையாடி தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான கல்வித்தகைமையினைக் குறைத்தவரும் முதல்வர் தான் என்றும். இதனை எவ்வளவுக்கு நம்பு கின்றீர்களோ தெரியவில்லை. ஆனால்தற்காலிக ஊழியர்களுக்கான நிரந்த நியமனத்தில் முழுக்க முழுக்க நிர்வாகம் தான் முடிவெடுத்தது. முதல்வர் இதில் தலையிடவில்லை. நீங்கள் நம்பமாட்டீர்கள் ஆனால் அதுதான் உண்மை. ஆளுநர் முதல்வருக்கு வழங்கிய சலுகையினால் தான் இந்த நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனை நேற்று முன்தினம் இடம்பெற்ற நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வின் போது கூற மறந்து விட்டேன் என்று கூறி வருத்தம் தெரிவித்தார். இதேவேளை தற்காலிக ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நேர்முகத் தேர்வு இடம்பெறும் போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எதிராகயிருந்தனர் என்றும் கூறியிருந்தார்.

இதன் போது கருத்துக்கூறிய முதல்வர், யாழ்.மாநகரசபை யின் வரலாற்றில் முதன்முறையாக எந்த விதமான அரசியல் தலையீடுகளும் இன்றி வழங்கப்பட்ட நியமனம். கல்வித்தகைமை குறைக்கப்பட்டது ஊழியர்களின் நிலையை அறிந்து வழங்கப்பட்ட நியமனம். எல்லோருக்கும் கேள்வி கேட்கும் உரிமையுண்டு. ஆனால் முறைகேடு என்பதில் உண்மையில்லை. தற்காலிக ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் பெறும் ஊழியர்களின் பெயர்பட்டியல் வட க்கு முதலமைச்சருக்கும் அனுப்பிவைகக பட்டது.

மேலும்,மாநகர சபை நிர்வாகத்தில் தொழிற்சங்கம் தலையிட முடியாது. தொழிற்சங்கத்திற்கு ஒருபோதும் நாம் அடிபணியோம். இதேவேளை மிகவிரைவில் சுகாதார தொழிலாளர்களை இணைக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம் என்றார். (2-6)

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கலாபூஷண விருது

கலைத்துறையில் சிறந்த பணியாற்றும் கலைஞர்களுக்கு வருடந்தோறும்கலாசார அலுவல்கள்திணைக்களம்இந்து சமய,கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் ஏற்பாட்டில் கலாபூஷணம் எனும் விருது வழங்கப்பட்டு வருகின்றது என பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும் இவ் விருதுக்குத் தமிழ்க் கலைஞர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு உண்டு.

இதற்கமையசிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு,தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்ற துறைகளில் மிகவும் சிறப்புச் சேவையாற்றியவர்கள் கலாபூஷண விருது பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

அத்துடன் அறுபது வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள் மட்டும் இவ்விருது பெறத் தகுதியுடையவர்களாவர்.

இவ்விருது தொடர்பிலான விபரங்கள், விண்ணப்ப படிவங்கள் போன்றன ஒவ்வொரு மாவட்டச் செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டங்களிலும் இருந்தும் முன்னுரிமை அடிப்படையில் 5 கலைஞர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கமைய மாவட்டச் செயலகங்களின் சிபாரிசுடன் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளன.எனவே விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக மாவட்டச் செயலாளர்களின் சிபாரிசுடன் எதிர்வரும் யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடிய வகையில் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ,248,1/1 ,காலி வீதி, கொழும்பு என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளன. (2)

## கலாசார மத்திய நிலைய திறப்பு விழா இன்று

(காரைநகர்)

மஹிந்த சிந்தனையின் எதிர்கால திட்டத்தின் பிரகாரம் நாடு பூராகவும் கலாசார மத்திய நிலையத்தினை நிர்மாணித்தல் வேலைத்திட்டத்தின் கீழ் கலாசார மற்றும் தலை அலுவல்கள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட காரைநகர் கலாசார மத்திய நிலையம் இன்று பிற்பகல் 4 மணிக்கு கலாசார கலை அலுவல்கள் அமைச்சு ரீ.பீ.ஏக்கநாயக்கவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, பாராளு மன்ற குழுக்களின் பிரதித் தலைவரும்யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி,யாழ் மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோ ரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர். (2-246)





புத்தூர் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலம்புரி நிர்வாக இயக்குநர் எஸ்.வெற்றி வேலாயுதம், வித்தியாலய முதல்வர் ஜே.எ.தவநாயகம் உள்ளிட்ட விருந்தினர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் வரவேற்கப்படுவதையும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 80 |
| தக்காளி | 50 | 60 | 30 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 30 | 20 | 30 | 40 |
| கரட் | 90 | 100 | 80 | 80 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 50 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 70-80 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 | 100 |
| பாகற்காய் | 120 | 120 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 60 | — | 50 |
| பயற்றங்காய் | 20 | 40 | — | 40 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 30 | 60 |
| கறிமிளகாய் | 60 | 70 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 20-60 | 80 | 60 | 100 |
| போஞ்சி | — | 120 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 120 | 100 | 80 |

# மத்திய மாகாண அரசுகள் இணைந்தே அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும்

## யாழில் அமைச்சர் ஏக்கநாயக்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசும் மாகாண அமைச்சும் இணைந்தே அபிவிருத்தியினை மேற்கொள்ள முடியும் என கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ஏக்கநாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பல்மத கலைஞர்களினை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 9 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்

[illegible] இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம்பெறவேண்டும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவிலும் முக்கியமான பரிந்துரையொன்று காணப்படுகின்றது.

அதாவது இந்நாட்டில் உள்ள இனங்களிற்கிடையில் ஒற்றுமையினை வளர்த்துக் கொள்ளும் பிரதான காரணியாக கலை கலாசாரம் உள்ளது.

ஆகையினால் நம்முடைய கலை கலாசாரத்தினை வளர்த்துக் கொள்வதோடு அத்துறையினை நாம் முன்னேற்றவும் வேண்டும்.

இனங்களிற்கிடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கு கலாசார நிகழ்வுகளினை வடக்கு மாகாணத்தில் மேலும் நடத்தவுள்ளோம்.

வடக்கில் தேவையான கலாசார நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளதோடு இங்குள்ள பிரதேசங்களின் அபிவிருத்தியினை மத்திய மாகாண அரசுகள் இணைந்தே மேற்கொள்ளமுடியும்என்றார்அவர். (2-4)

## வாகனம் வீதியை விட்டு விலகியதில் விபத்து 7 பேர் படுகாயம்

அநுராதபுரம் - தம்புள்ளை பிரதான வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 7 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

முண்டிக்குளம் முகாமில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இராணுவ டிரக் ஒன்றே வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபததில் காயமடைந்த 7 இராணுவ வீரர்களும் சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதல் மூவரின் நிலை கவலைககிடம் என பொலிஸார் தெரிவித்தனர். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேநீர் கோப்பையில் இறந்த நிலையில் பல்லி

(குருமன்காடு)

மன்னார் நீதிமன்ற வளாகத்தில் அமைந் துள்ள சிற்றுண்டிச்சாலையொன்றில் தேநீர் அருந்தியவர்களில் ஒருவருக்கு திடீர் சுக வீனம் ஏற்பட்ட நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

மன்னார் நீதிமன்றத்தில்வழக்கு விசா ரணைக்காக வந்தவர்களில் 5 பேர் நீதிமன்றத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச் சாலையில் தேநீர் அருந்தியுள்ளனர்.

இதன்போது ஐந்து பேரில் ஒருவருடைய தேநீர் கோப்பையில் இறந்த நிலையில் முழுமையான பல்லி ஒன்று தென்பட்டுள் ளது.

இந்நிலையில் குறித்த நபர் சுகவீனம் அடைந்த நிலையில் உடனடியாக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டார்.

ஏனைய நான்கு பேரும் வழக்கு விசாரணையின் காரணமாக உடனடியாக நீதிமன்றத்தில் இருந்து வைத்திய சாலைக் குச் செல்லவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வழக்கு விசாரணைகளின் பின் ஏனைய 4 பேரும் மன்னார் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# அரச திணைக்கள காணிகளை கையகப்படுத்தும் தனி நபர்கள்

(மல்லாவி)

வடக்கு மாகாணத்தின் மைய நகரமான ஏ-9 வீதி அருகில் உள்ள மாங்குளத்தில் அரச திணைக்களங்களின் தேவைக்கென ஒதுக்கப்பட்ட பொதுக் காணிகளை சில தனிநபர்கள் அத்துமீறி அவற்றை கையகப்படுத்துகின்ற நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பில் தெரியவருவது,




இலங்கை அரசினால் 1960 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு மாகாணத்தின் மைய நகரமாக அமையவுள்ள மாங்குள அரச செயலகங்களுக்குரிய காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இவற்றில் வடக்கு மாகாணத்தின் இலங்கை போக்குவரத்து சபையின் செயலகத்துக்குரிய காணியாக 8 ஏக்கரும் முல்லை. மாவட்ட உப மாவட்டத்திற்குரிய செயலகத்துக்குரிய காணியாக 2 ஏக்கரும் முல்லை. மாவட்ட நீதிமன்றத்திற்கென ஒரு ஏக்கர் காணி உட்பட பல அரச செயலகங்களுக்குரிய காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

இக் காணிகளை இடப்பெயர்வின் பின்னர் ஒரு சில தனியார்கள் மோசடியான முறையில் காணி அனுமதிப் பத்திரங்களை பெற்று கட்டடங்கள் அமைத்து வருவதனை காணக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு வட இலங்கை போக்குவரத்திற்குரிய காணி மோசடியாக கையகப்படுத்தப் பட்டுள்ள நிலையில் அதனை மீளப் பெறும் நடவடிக்கையில் வடமாகாண இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் ஈடுபட்டுள்ளார். (15)

# பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கை






யுஎன்ஹபிடட் அனுசரணையில் வவுனியா நகர சபை ஏற்பாட்டில் பார்த்தீனியம் அழிப்பு நடவடிக்கை வவுனியா மகாவித்தியாலயம், வவுனியா விபுலானந்தா கல்லூரி, வவுனியா பிரமண்டு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களால் குருமன்காட்டில் உள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்திற்கு முன்னால் உள்ள மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட சாரணர் ஆணையாளர் ச.பத்மநாதன், உதவி மாவட்ட ஆணையாளர் திரி சாரணர் ஊடகம் சு.காண்டீபன் மற்றும் தொடர்புகள் தலைவர் மாவட்ட ஜனாதி பதி சாரணர்சங்கம், சி.ஆரூரன் உதவி மாவட்ட ஆணையாளர், வவுனியா தெற்கு வலயம் மற்றும் வவுனியா நகர வரி யிறுப்பாளர் சங்க தலை வர் சந்திரகுமார் (கண்ணன்), வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்க செய லாளர் ரோய் ஜெயக்குமார், வவு னியா நகர சபை ஊழியர்கள் செல்வேந்திரன், விஜய குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (250)

# கிளிநொச்சியில் தொழிலாளர் தினம்

(கிளிநொச்சி)

உலகத் தொழிலாளர் தினம் கந்தபுரம் பிரதேச சபை வளாகத்தில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சு. தயாபரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராசா,வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.அரிய ரத்தினம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை.குகராசா ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர். (27)

# கிளிநொச்சி கல்வி வலய தமிழ்த்தின போட்டி முடிபுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

(சிவநகர்)

கிளிநொச்சி கல்வி வலயத்தினரால் இவ்வாண்டு நடத்தப்பட்ட வலய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரங்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் அறிவித்துள்ளார்.

இதன்படி முதல் மூன்றிடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**குறுநாடக ஆக்கம்**

**பிரிவு-4**

இ.தனுசன் (கிளி/புனித பற்றீமா றோ.க.த.க.பா.),வி.நமசி (கிளி/ஜெயபுரம் ம.வி), செ.கீர்த்தனா (கிளி/இயக்கச்சி அ.த.க.பா.)

**பிரிவு-5**

ச.தர்மிகா (கிளி/திருவையாறு ம.வி), ர.றினுசா (கிளி/வேரவில் இந்து ம.வி.), க.ஜெயப்பிரியா (கிளி/கண்டாவளை ம.வி.)

**கவிதை ஆக்கம் பிரிவு-4**

மோ. டிலோஜினி(கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), அ.மகிழினி (கிளி/ஜெயபுரம் ம.வி.), ந. நிசாந்தினி(கிளி/கண்டாவளை ம.வி.)

**பிரிவு-5**

சு.ஜனனி (கிளி/கிளிநொச்சி ம.வி), ந.யாழினி (கிளி/முழங்காவில் ம.வி.), வ.அபிநயா (கிளி/பளை மத்திய கல்லூரி)

**சிறுகதை பிரிவு-4**

கே.திவாரகா (கிளி/பளை மத்திய கல்லூரி), வா.நித்திகா (கிளி/ திருவையாறு ம.வி.) , சி.மெல்வி (கிளி/முழங்காவில் ம.வி.)

**பிரிவு-5**

வி.சரண்யா (கிளி/பூநகரி மத்திய கல்லூரி), மா.அருள்ஸ்ரீபன் (கிளி/பளை மத்திய கல்லூரி), நா.ஜெனோபா (கிளி/தருமபுரம் ம.கல்லூரி)

**வாசிப்பு பிரிவு-1**

ஜோ.சுகிந்தன் (கிளி/தம்பிராசபுரம் அ.த.க.பா.), ச.நேசன் (கிளி/கரியாலை நாகபடுவான் இல 2 அ.த.க.பா.), ப.மதுரா (கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வி.)

**பிரிவு-2**

லோ.சாருஜா (கிளி/கிளி.மத்திய மகாவித்தி, உ..கஜிதா (கிளி / பூநகரி மத்திய கல்லூரி), கே.கிசேரன் (கிளி/பளை மத்திய கல்லூரி)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு (கதை கூறல்) பிரிவு-1**

ஜெ.வறிந்துஜா (கிளி/தருமபுரம் இல.1), பா.ஜதுசிகா(கிளி/பளை இந்து ஆரம்ப வி.), ஜெ.கீர்த்திகா (கிளி/கிளி மத்திய ஆரம்ப வி.)

**பேச்சு பிரிவு-1**

வி.மதுமிதா (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), ச.சஞ்ஜயன் (கிளி/தர்மபுரம் இல. 1), இ.விதுசா (கிளி/முழங்காவில் ஆரம்ப வி.)

**பிரிவு-2**

றே.சயனியா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ஜோ.ஜதிலயா(கிளி/முருகானந்தாக் கல்லூரி),சி.வாசுகி (கிளி/பூநகரி மத்திய கல்லூரி)

(தொடரும்)

# வவு. இரு இடங்களில் திருடர்கள் கைவரிசை

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் உள்ள பிரபல வர்த்தக நிலையம் மற்றும் கற்குழி பகுதியில் அமைந்திருக்கும் வீடு ஒன்றிலும் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வவுனியா சந்தைச் சுற்றுவட்ட வீதியில் அமைந்திருக்கும் பல் பொருள் வாணிபத்தின் கூரைகள் உடைக்கப்பட்டு பால்மா, சீனி போன்ற விலையுயர்ந்த பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா கற்குழி பகுதியிலும் வீட்டு உரிமையாளர்கள் வெளியில் சென்றவேளை வீட்டின் கூரைகள் உடைக்கப்பட்டு மடிக்கணனிகள் மற்றும் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இதேபோன்று வீட்டு உரிமையாளர்கள் வீடுகளைவிட்டு வெளியிடங்களுக்கு செல்லும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தியே திருடர்கள் வெற்றிகரமாக தமது திருட்டுக்களை மேற்கொள்வதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (250)

# பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

(மல்லாவி)

மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் நாற்பதாவது ஆண்டு விழா மகுட ஜோதி மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் ந.கருணாகரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை. மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபையின் பிரதி தவிசாளர் ம.அன்ரனி ஜெயநாதன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன், ஒட்டுசுட்டான் 64 ஆம் பிரிவு இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் எஸ்.டீ.தி.லியனகே உட்பட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலை சமூகம் அழைப்பு விடுத்துள்ளது. (15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

792

## மூன்று அபாயக் கனவுகள்



...அதைப்பற்றியே யோசித்துக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்த மன்னரிடம் ஒருநாள் சிவா என்ற இளைஞன் வந்தான். அவன் மன்னரை வணங்கிவிட்டு, "மகாராஜா! நான் அறிவு ஆற்றல் படைத்தவன்! ஆனால் என்னுடைய திறமையை இதுவரை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்கவில்லை. உங்களுடைய கனவுகளின் உட்பொருளைப் பற்றிய என் கருத்தை வெளியிட அனுமதித்தால், நான் ஓர் அறிவாளி என்று வெளி உலகுக்குக் காட்ட எனக்கு வாய்ப்பு கிடைக்கும்!" என்றான்.

மன்னனும், ஜடாதர முனிவர் தனக்கு விடுத்த எச்சரிக்கை பற்றியும், அதன் பிறகு அவர் கூறியது போலவே தனக்குத் தொடர்ச்சியாகத் தோன்றிய விபரீதக் கனவுகளையும் அவனிடம் விளக்கி கூறினார்.

அதை கவனமாகக் கேட்ட சிவா, "மகாராஜா! நீங்கள் கண்ட கனவுகளுக்கு உட்பொருள் உள்ளது. முதல் இரண்டு கனவுகளின் சூசகமான உட்பொருளை நான் விளக்குகறேன். அவை சரியாக அமைந்தால், மூன்றாவது கனவையும் விளக்குகிறேன்" என்றான்.

மன்னன் சரியென்றதும் சிவா, "மகாராஜா! தங்களுடைய முதற் கனவில் தங்களை ஒரு நாகம் துரத்தியது. நாகபாம்பு தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு வஞ்சம் தீர்க்கும் சுபாவம் உடையது. உங்கள் கனவின் உட்பொருள், உங்களால் தண்டிக்கப்பட்ட ஒருவன் உங்களைப் பழி தீர்க்க திட்டம் வகுத்துள்ளான். நீங்கள் அவனை உடனடியாகக் கண்டு பிடித்து சிறையில் அடைக்க வேண்டும். இரண்டாவது கனவில் விண்வெளியிலிருந்து மின்னல் இறங்கி வந்து உங்களைத் தாக்க முயற்சித்தது. அதாவது, உங்களுடைய பகைவனான அயல் நாட்டு மன்னன் உங்கள் மீது படையெடுக்கத் திட்டம் தீட்டுகிறான் என்பதே உட்பொருள்!" என்றான்.

அதைக் கேட்ட மன்னர் பிரமித்துப் போனார். சிவா கூறுவது நூற்றுக்கு நூறு சரியாக இருக்கும் என்று அவருக்குத் தோன்றியது. யோசிதுப் பார்த்ததில், சமீபத்தில் கொள்ளையர் தலைவன் பைரவனை சவுக்கடி தந்து தண்டனை கொடுத்தது நினைவிற்கு வந்தது. உடனே, காவலர்களை அழைத்து பைரவனை மீண்டும் கைது செய்ய உத்தரவிட்டார். அவனை நையப் புடைத்து விசாரித்ததில், மன்னரைக் கொலை செய்ய சதித்திட்டமிட்டு ஒரு விஷப்பாம்பை அவருடைய படுக்கையறையில் விட்டிருந்தது தெரிய வந்தது. இதன் மூலம் அவன் சதித்திட்டம் தக்க சமயத்தில் முறியடிக்கப்பட்டது.

தனது இரண்டாவது கனவின் விளக்கம் உண்மையா என்று அறிய, ஒற்றர்களை அண்டை அயல் ராஜ்யங்களுக்கு அனுப்பினார்.

அண்டை ராஜ்யமான சிங்கபுரியின் மன்னன் விக்கிரமசேனன் தங்கள் மீது போர் தொடுக்க ரகசியமாகத் திட்டமிட்டிருப்பதை ஒற்றர்கள் மூலம் அறியப்பெற்ற மன்னர் திகைத்துப் போனார்.

ஆகையால் அவர் சிவாவிடம், "சிவா! விக்கிரமசேனன் படைபலம் பொருந்தியவன்! எனக்கு இபபோதே அவன் திட்டம் தெரிந்தாலும், என்



னால் எதுவும் செய்ய இயலாதே! என்ன செய்யலாம்?" என்று கவலையுடன் கேட்டார்.

"அதற்கும் ஒரு வழி உண்டு! அதைத்தான் தங்கள் மூன்றாவது கனவு விளக்குகிறது. கனவில் தாங்கள் கண்ட சிங்கம் சிங்கபுரி மன்னனைக் குறிக்கிறது. அவன் விரைவிலேயே படையெடுப்பது நிச்சயம்! அப்படிப் படையெடுத்தால், தாங்கள் கண்டிப்பாக படுதோல்வி அடைவீர்கள்! ஆனால், உங்களுடைய பெண் தோல்வியில் இருந்து உங்களைக் காப்பாற்ற முடியும்!" என்றான்.

"எப்படி?" என்று மன்னர் ஆவலுடன் கேட்டார். "சிங்கபுரி மன்னனுக்குத் திருமண வயதில் ஒரு மகன் உண்டு. அவனுடன் உங்கள் மகளை மணமுடித்தால், சிங்கபுரி மன்னன் உங்கள் சம்மந்தி ஆகிவிடுவார். பிறகு போரே நிகழாது" என்றான்.

அவனுடைய ஆலோசனையைக் கேட்டு மன்னர் உடனே தூதுவன் மூலம் ஒரு கடிதமும், இளவரசியின் ஓவியமும் அனுப்பினார். அதில், "நீங்கள் சம்மதித்தால், உங்கள் மகனை என் பெண்ணுக்கு மணமுடிக்க விரும்புகிறேன்" என்று எழுதி இருந்தார்.

கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்த இளவரசியின் ஓவியத்தைக் கண்டவுடனே, சிங்கபுரி இளவரசன் தன் சம்மதத்தை தன் தந்தையிடம் தெரிவித்தான். தன் மகனின் விருப்பத்தையறிந்த விக்கிரமசேனன், மணிகண்ட மன்னருடன் போர் தொடுக்கும் திட்டத்தைக் கைவிட்டான். திருமணமும் விரைவில் இனிதே நடந்து முடிந்தது. சிவாவின் புத்தி கூர்மையினால் தனக்கு வரவிருந்த அபாயங்களிலிருந்து தப்பித்த மணிகண்டர், அவனை மிக்வும் பாராட்டி பரிசுகள் பல அளித்து,தன் பிரதம ஆலோசகராக நியமித்தார்.....

(முற்றும்)

04.2014
30

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 313 - உரோமப் பேரரசின் மன்னன் லிசீனியஸ் அனைத்து கிழக்கு ரோமப் பேரரசையும் ஒனறாக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.
- 1006 - மிகவும் ஒளி கூடிய சுப்பர்நோவா எஸ்.என் 1006 லூப்பஸ் என்ற விண்மீன் கூட்டத்தில் அவதானிக்கப்பட்டது.
- 1483 - இந்த நாளில் புளூட்டோ நெப்டியூனின் சுற்று வட்டத்துள் வந்தது. இது அங்கு ஜூலை 23, 1503 வரை அங்கு இருந்தது.
- 1803 - ஐக்கிய அமெரிக்கா லூசியானா மாநிலத்தை பிரான்சிடம் இருந்து 15 மில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்கியது.
- 1838 - நிக்கராகுவா மத்திய அமெரிக்கக் கூட்டமைப்பில் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பகுதியானது.
- 1945 - அடொல்ஃப் ஹிட்லர் தனது மனைவியுடன் தற்கொலை செய்து கொண்டார். சோவியத் படையினர் பெர்லினில் ஜேர்மனிய நாடாளுமன்றில் செங்கொடியை ஏற்றினர்.
- 1975 - வியட்நாம் போர்: கம்யூனிசப் படைகள் சாய்கோன் நகரைக் கைப்பற்றினர். தென் வியட்நாமியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்ததில் வியட்நாம் போர் முடிவுக்கு வந்தது.
- 1982 - திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1993 - ஜெனீவாவில் ஐரோப்பிய அணுக்கருவியல் ஆய்வு அமைப்பில் உலகளாவிய வலையமைப்பு பிறந்தது.
- 1999 - ஆசியான் அமைப்பில் கம்போடியா இணைந்து கொண்டது.
- 2006 - ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் கடத்தப்பட்ட சூரியநாராயணா என்ற இந்தியப் பொறியியலாளர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.


### பிறப்புகள்

- 1777 - கார்ல் ஃப்ரெடெரிக் காஸ், கணிதவியலாளர் (இ. 1855)
- 1870 - தாதாசாஹெப் பால்கே, இந்திய திரைப்படத் துறையின் முன்னோடி (இ. 1944)
- 1959 - சிரீபன் கார்ப்பர், கனடாவின் 22ஆவது பிரதமர்

### இறப்புகள்

- 1945 - அடெல்ஃப் ஹிட்லர், ஜேர்மனியை ஆண்ட ஆஸ்திரிய சர்வாதிகாரி (பி. 1889)
- 1961 - லோங் அடிகள், யாழ்ப்பாணத்தில் பணி புரிந்த அயர்லாந்து அடிகள் (பி. 1896)

### அடெல்ஃப் ஹிட்லர்



அடெல்ஃப் ஹிட்லர் காஸ்தாப் ஜூம் பொம்மர் என்னுமிடத்தில் 20 ஏப்ரல், 1889 இல் தாய் கிளாரா போல்ஸ், தந்தை அலாய்ஸ் கிட்லருக்கும் ஆறு குழந்தைகளில் நான்காவது குழந்தையாக பிறந்தார்.

இவருடன் பிறந்த நால்வர் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர். எஞ்சியவர்கள் அடெல்ஃப் கிட்லரும் அவரின் கடைசி தங்கை பவுலா கிட்லர் மட்டும்தான். ஜேர்மனியின் நாசிக் கட்சியின் தலைவராக விளங்கியவர்.

அவர் 1933-ஆம் ஆண்டு ஜேர்மனி நாட்டின் சான்சலராக நியமிக்கப்பட்டார். பின்பு 1934-ஆம் ஆண்டு, ஜேர்மனி நாட்டின் தலைவரானார். 1945-ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதியன்று தற்கொலை செய்து கொண்டது வரை அவர் அப்பதவியில் தொடர்ந்தார்.

ஜேர்மனி நாட்டின் ஃபியூரர் என அழைக்கப்பட்டார். இரண்டாம் உலகப்போரின் இறுதியில் ஸ்டாலினின் செம்படைகளிடம் ஜேர்மன் தலைநகர் பெர்லினில் கிட்லரின் நாசிப்படைகள் வீழ்ச்சியுற்றது. அப்படைகள் அவரை நெருங்குவதற்கு முன் தன் கைத்துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அவரோடு அவர் மனைவி இவா பிரானும் தற்கொலை செய்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....உங்களுக்கு இன்னொரு விடயமும் சொல்கிறேன் கேளுங்கள். இந்த சந்தன மகாதேவரை அபிஷேக காலங்களில் தரிசிப்பவர்களுக்குச் சில வித்தியாசமான அனுபவங்களும் கிடைத்திருக்கிறதாம்.


சில சமயங்களில் அபிஷேகம் நடக்கும்போது தவம் செய்யும் சித்தராக இவர் காட்சியளித்திருக்கிறாராம். எதற்கும் ஒரு கொடுப்பினை வேண்டும். நமக்கு என்ன கொடுப்பினை இருக்கிறதோ? என்று சொல்லியவாறே திருநீற்றினை அணிந்து கொண்டார் அந்தச் சிவனடியார்.

சதுரகிரி யாத்திரைக்கு வரும்போது இன்னொருமுறை மலை ஏற வேண்டுமே என்ற கஷ்டத்திற்கு அஞ்சி பெரும்பாலான பக்தர்கள் கீழக்கோயிலான ஸ்ரீ சுந்தர மகாலிங்கத்தையும் சுந்தர மூர்த்தி லிங்கத்தையும் வணங்கி விட்டு அப்படியே கீழே திரும்பிச் சென்று விடுகின்றனர்.

தவிர இங்கு இரவு தங்குவதற்கேற்ற வசதிகள் இல்லாததாலும் பொழுதோடே கீழே செல்ல வேண்டும் என்ற காரணத்தினாலும் சந்தன லிங்கத்தைத் தரிசிக்காமலே பயணத்தை முடித்துக் கொள்கின்றனர்.

பக்தர்கள் அனைவரும் இந்த மலைக்கும் வந்து சந்தன மகாதேவரையும் வழிபட்டுச் செல்ல வேண்டுமென்பதற்காக கோயிலுக்குப் பக்கத்திலேயே அன்னதானக் கூடமொன்றும் ஏற்படுத்தி சந்தன மகாலிங்கத்தைத் தரிசிக்க வரும் பக்தர்களின் பசியைப் போக்கி வருகின்றனர் சந்தன மகாலிங்க பக்த சன கமிட்டி.

மறுபடியும் ஆற அமர சந்தன மகாதேவி, சந்தன முருகன், சந்தன விநாயகர்களைத் தரிசிக்கின்றோம். கும்பலில் கிடைத்த தரிசனத்தைவிட இப்பொழுது மனதுக்கு நிறைவாக உள்ளது. சந்தன மகாதேவி ஆலயத்தை ஒட்டி ஓடிக் கொண்டிருக்கும் ஆகாய கங்கையை நோக்குகிறோம். மலை உச்சியிலிருந்து விழும் அருவி நேரடியாக வானத்திலிருந்தே கொட்டுவது போல் தோற்றம் கொள்கிறது. மேலே மலையில் காளி வனம் என்கிற இருண்ட வனம் ஒன்று இருக்கிறது. அவ்வனத்திலிருந்து மலை உச்சியிலிருந்து விழும் இத் தீர்த்தம் சந்தன மகாலிங்கத் தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்தப் புண்ணியத் தீர்த்தத்தில் நீராடினால் எந்தப் பாவமும் நீங்கி முக்தி கிடைக்குமாம்.



சந்தன முருகன் சன்னிதி

மழைக்காலத்தில் இந்தத் தீர்த்தம் அருவிபோல் பொங்கி சன்னதியைத் தாண்டியும் குதித்துப் பெருகி கீழேயுள்ள சன்னதிகளையும் நனைத்தபடி ஓடுமாம்.

சந்தன மகாதேவி சன்னதி எதிரே சற்று தள்ளி, அம்மன் தவம் செய்த பாறை ஒன்று காணப்படுகிறது. தியானம் செய்பவர்கள் மட்டுமே அமரக் கூடிய மேடையாகக் காட்சி தருகிறது. அந்த மேடை மீது சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்தால் எத்தகைய மனச்சஞ்சலமும் நீங்கி அமைதி கிட்டுமாம்.

அம்மன் அமர்ந்து தவம் செய்த பாறையில் அடியேனும் அமர்ந்து சிறிது நேரம் தியானத்தில் அமர்ந்தேன். ஆஹா எத்துணை அமைதி. அந்த ஆனந்தத்தை அனுபவித்துப் பார்த்தால்தான் புரியும்.

எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தேனோ தெரியாது. நண்பர்கள் அருகில் வந்து அழைத்தபோதுதான் சுய நினைவு வந்தது. அருவியின் இரைச்சலையும் மீறி அமைதியாக உட்கார்ந்ததில் ஓங்கார ஒலி மட்டுமே மனதிற்குள் பரவிக் கொண்டிருந்தது. ஆன்மீக அனுபவம்.

அருகிலேயே திருக்கோயில் வழிபாட்டுக்குத் தேவையான மலர்களை

**ஆன்மீகம் 107**

வழங்கும் அழகிய நந்தவனம் ஒன்றும் காணப்படுகின்றது.

புரியாத மனதுடன் அம்மனை மறுபடியும் கண்குளிரத் தரிசித்துவிட்டு படி இறங்குகிறேன். கீழே எனக்காக நண்பர்கள் காத்துக் கொண்டிருந்தது எனக்குப் புரிந்தது. என்ன செய்வது அரிதாகக் கிடைத்த இந்த ஆனந்தத்தை இழந்துவிட முடியுமோ?

### பதினெண் சித்தர்கள்

சந்தன விநாயகருக்கு வலப்பக்கத்திலுள்ள மேடை சன்னதியில் பதினெண் சித்தர்களின் சிலா வடிவங்கள் ஒன்பது, ஒன்பது சிற்பங்களாக இரண்டு வரிசைகளில் இடம்பெற்றிருந்தது. ஒவ்வொரு சித்தரும் வெவ்வேறு நிலைகளில் அமர்ந்து காணப்பட்டனர்.

ஒருவர் பத்மாசனத்தில் அமர்ந்து யோக நிஷ்டையிலும், ஒருவர் அஞ்சலி கரத்தினராய் இறைவனை நோக்கித் தவமிருப்பது, ஒருவர் இரண்டு கரங்களையும் தலைக்கு மேல் தூக்கியபடி இறைவனைச் சரணாகதி அடைவது, ஒருவர் ஹஸ்த, வரத முத்திரையுடன், ஒருவர் காலை தொங்கப் போட்ட நிலையில், இறைவனைச் சுட்டிக்காட்டுவது இப்படி பல்வேறு நிலைகளில் நமக்குத் தரிசனம் தந்து கொண்டிருந்தனர்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**26**

...எங்கள் ஊர்க் கூழாங் கற்களுக்கு மத்தியில் இப்படியொரு பிரவாகமா?

கருவேலங்காட்டுக்குள் இப்படி ஒரு கற்பக மரமா?

சோளத்தட்டைகளுக்கு மத்தியில் இப்படியொரு ராஜகுயிலா?

எப்படியெல்லாம் கொண்டாடியிருப்பேன் தெரியுமா?

பேருந்து நிறுத்தத்தில் நிற்கும் போதும்- வரும் போதும்- போகும் போதும் திருவிழாவில் தொலைத்த ஒரு குழந்தையைத் தேடும் தகப்பனைப் போல, உங்கள் TMU 1845 வருகிறதா போகிறதா என்றல்லவா வாசித்துக் கொண்டிருந்தேன்?

அந்த நாட்களில் ஒரு நாளின் அதிகப்படியான நிமிடங்களில் நீங்கள் மட்டுமே என்னால் நினைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

தமிழ்த் திரையுலகின் மூன்றாம் தலைமுறையை- தொழில்நுட்பக் கலைஞர்களின் யுகமாக மலர வைத்தவர் நீங்கள் என்று நினைப்பேன்.


திரையுல்கின் தேவபாஷைகளைத் தவிர்த்துவிட்டு மனிதபாஷை பேச வைத்தவர் நீங்கள் என்று நினைப்பேன்.

பாத்திரங்களின் மன நிலைக்குப் பார்வையாளனை ஆயத்தப்படுத்துவதற்காகப் பின்புலங்களைப் பிசிறடிக்காமல் பேச வைத்தவர் நீங்கள் என்று நினைப்பேன்.

மேக மைதானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சினிமா என்னும் பஞ்சகல்யாணிக் குதிரையை அடக்கித் தரையிறக்கி எங்கள் கிராமத்து மனிதனுக்குப் பொதி சுமக்கும் வாகனமாய் நிறம் மாற்றிக் கொடுத்தவர் நீங்கள் என்று நினைப்பேன்.

ஐந்தே ஆண்டுகளில் மண்ணுக்கும் விண்ணுக்கும் விஸ்வரூபம் எடுத்த கலைஞர் நீங்கள்தான் என்று நினைப்பேன்.

உங்கள் படங்களைவிட உங்களை அதிகமாய் வாசித்திருக்கிறேன்.



**பாரதிராஜா**

தலையே இல்லாதவர்கள் கிரீடம் வைத்துக் கொள்ள ஆசைப்படும் யுகத்தில் கிரீடம் இருந்தும் தலையில் வைத்துக் கொள்ள ஆசைப்படாத உங்கள் அடக்கம் இருக்கிறதே- அது


வெளியே தெரியாமல் உங்கள் ஆரம்ப கால அஸ்திபாரங்களுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறீர்களே- அது

உங்களுக்கு ஒருவரைப் பிடித்து விட்டால் அவரைக் கெட்ட வார்த்தைகளில் புகழ்வீர்களே- அது

காருக்குள் பேசிக்கொண்டு வரும்போதே- கண்கள் மயங்கி திடீரென்று அந்தரத்தில் சஞ்சரிப்பீர்களே- அது

பழைய கதை பேசும் பரவசத்தில் உங்கள் கண்களின் ஓரத்தில் கசியுமே கண்ணீர்- அது

மேஜை நாற்காலிகளை உடைத்துப் போட்டுவிடும் உங்கள் கோப நிமிடங்களிலும் நான் வந்தால் மட்டும் வாங்க என்று ஒரு புன்னகையை எனக்காகச்



சிந்திவிட்டு மறுபடியும் விட்ட இடத்திலிருந்து கோபப்படுவீர்களே- அது

இதெல்லாம் பிடிக்கும் உங்களிடம் எனக்கு.

உங்களுக்கே தெரியாது!

உங்கள் சாதனை என்ன தெரியுமா?

உடைமாற்றக்கூட யோசித்த திரையுலகை உயிர் மாற்றினீர்களே! அது தான்!

நீங்கள் சோர்வடையக் கூடாது.

ராசாவே வருத்தமா? ஆகாயம் சுருங்குமா?

பூகம்பம் நேரலாம்.

அதனால்- பூமியின் பொருட்கள் இடம் மாறலாம்;

பூமி எடை குறையுமோ?

நீங்கள் பூமி.

(தொடரும்)

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரையும் எளிதில் கவரும் 8ஆம் எண்காரர்களின் குணாதிசயங்கள்

08

8,17,26 போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

எல்லா எண்காரர்களை விட வும் போராட்டம் நிறைந்த எண்கா ரர்கள் இவர்கள். போராட்டத்தில் தான் இவர் களின் வாழ்க்கையே ஓடிக் கொண்டிருக்கும். ஆனால் இவர்களைப் பார்த் தால் அப்படித் தெரியாது தங்களது பேச்சு சாதுரியத்தால் அவற்றை எல்லாம் மறக்கச் செய்து சமாளித்து விடுவார்கள்.

ஆனால், இவர்களோடு மிக நெருக்கமாக இருந்து கொஞ்சம் ஊடுருவினால் அல்லது பழகிப் பார்த் தால் எல்லாமே வெட்டவெளிச்சமாகி விடும்.

இந்த விடயத்தில் , 8 ஆம் எண் காரர்கள் சிறந்த நடிகர்களாகவே இருப்பார்கள். மற்றைய எண்காரர் களைப் போல் இவர்களிடம் ஏதா வது சொன்னால்அதைக் கேட்டுக் கொண்டு அமைதியாக இருக்கமாட்டார்கள். உடனேயே அதற்கு பதில் சொல்லி விடுவார்கள்.

இவர்களுக்கு கிடைக்கும் ஒவ் வொரு வெற்றிக்குப் பின்னாலும் போராட்டத்தின் நிழல்தான் இருக் கும்.

இந்த எட்டாம் எண் என்பது மிக வும் சக்தி மிக்க ஓர் எண்ணாகும். யுக பிறவியிலுள்ளயோகி, மகான், ஞானி, சித்தர்கள் போன்றவர்கள் இயற்கை யிலேயே மனிதப் பிறவிகளை விட அதிகம் சக்தி கொண்டிருப்பதால், இவர்களால் மட்டுமே 8 ஆம் எண்ணை எதிர்கொள்ள முடியும்.

இந்த எண்காரர்களை எவரும் தவறாக எடை போட்டு விடக்கூடாது. எவருக்கும் அஞ்சாத அற்புதமான எண் இது. எவரையும் நடுங்க வைக் கக் கூடிய இராஜதந்திரம் கொண்ட எண்.

இந்த எண்காரர்கள் தங்களை மதிப்பவர்களைத்தான் மதிப்பார் கள். இல்லையென்றால், அவர்களை மறந்துவிடுவார்கள். தன் சொந்த நலனை விட அடுத்தவர்கள் நலனுக் காகப் பாடுபடுவார்கள். இவரிடம் சீண்டும் எண்ணத்துடன் எவராவது வந்தால், வந்தவர் வழி தெரியாமல் போய்விடுவார். இந்த எண் காரர்களு டன் மோதுகிறவர்கள் கொஞ்சம் ஜாக் கிரதையாகவே மோத வேண்டும்.

இந்த எண்காரர்களுக்கு என்று தனிப்பாதை உண்டு. அந்தப் பாதையில் தான் அவர்கள் செல்வார்கள். அது வும் இவர்கள் அமைத்துக் கொண்ட பாதையாகவே இருக்கும். சிறு விட யங்களுக்கு கூட இவர்கள் உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள். கோபம் என் பது இவர்களது குடும்ப சொத்துப் போன்றது.

இவர்கள் பிற இடங்களில் வேலை செய்வதால் இவர்களின் சக்தி பிறத் தியாருக்குத்தான் சென்று விடும் அவர் கள் தான் அதிகம் நன்மை பெறுவார் கள்.

இதனால் இந்த எண்காரர்கள் சுயமாகவே தொழில் செய்வதால் வாழ்க்கையில் தொழில் அதிபர்க ளாக வரவாய்ப் புண்டு.

8,17,26 என்ற இந்த எண் வரிசை யில் 17 ஆம் திகதி என்பது மிகவும் வித்தியாசமான ஓர் எண்ணாகும். 1 ஆம் எண்ணும் 7 ஆம் எண்ணும் சங்கமமாகித்தான் இந்த 17 ஆம் எண் வருகிறது.

இரண்டுமே மிக சக்தி வாய்ந்த எண்கள். 1 ஆம் எண் என்பது சூரிய ஆதிக்கத்தில் உள்ள எண். எந்த இடத்திலும் தாங்களே முதல்வர்க ளாக இருக்க வேண்டும் என்ற எண் ணத்தை ஊற்றெடுக்கச் செய்யும் எண்ணாக இது இருக்கிறது.

7 ஆம் எண் என்பது கலைத் துறையோடு அதிகம் சம்பந்தப்பட் டது. இதனால் கலை ஆர்வமும் இவர்க ளிடம் அதிகம் நிறைந்திருக்கும்.

இந்த திகதியில் பிறந்த பெண் களை எளிதாக வசப்படுத்தி விடலாம். இந்தத் திகதியில் பிறந்தவர்கள் சாதாரணக் குடிசையில் பிறந்தவர் களாக இருந்தாலும் சீக்கிரத்தில் சீமா னாகி விடுவார்கள்.

எதிலும் இடைவிடாத முயற்சி இருக் கும். எதையும் சமாளித்துக் கொண்டு முன்னேறுவார்கள். இவர் களுக்குப் பிறகும் இவர்களைப் பற்றி மக்கள் பேசும்படியாக அரிய காரியங்களைச் செய்துவிட்டுப் போவார் கள்.

## ஜோதிடக் களம்

இவர்கள் கையில் எப்போதுமே சொந்தப் பணமோ, பிறர் பணமோ பண நடமாட்டம் அதிகம் இருக்கும்.

இவர்கள் வாழ்க்கையில் எல்லா சுகங்களையும் அனுபவிப்பார்கள்.

ஒவ்வொரு சிறு விடயத்தையும் உன்னிப்பாகவே கவனிக்கும் இவர் கள் பலவற்றையும் கற்க வேண்டும் என்று விரும்புவார்கள். தனிமையை விரும்பும் இவர்கள் அதேசமயம் பல ரும் தம்முடன் இருக்க வேண் டும் என்று ஆசைப்படுவார்கள்.

இவர்கள் பலருக்கு நல்ல யோசனை சொல்வார்கள். அடுத்த வர்களின் ஆலோசனைகளைக் கேட் டாலும் இறுதி முடிவு என்னவோ இவர் களின் விருப்பமாகத்தான் அரங்கே றும்.

**அலங்காரப் பொருட்கள், மீன்தொட்டி, சாமிப்படங்கள், படுக்கை இதெல்லாம் அடிக்கடி இடம் மாற்றுவது கூடவே கூடாது. அப்படிச் செய்தால் வீணான குழப்பம் வீட்டில் நிலவும். தீர்மானமா யோசித்து நிரந்தரமான இடத்தில் இதை யெல்லாம் வைத்தால் குழப்பமே இல்லாமல் குதூகலம் நிலைக்கும்.**

8 ஆம் எண்ணுக்கு 8 ஆம் எண் எப்போதுமே உதவி செய்வதில்லை. எதேர்ச்சையாக அப்படி நடந்தாலும் அது நிரந்தரமாக இருக்காது.

8 ஆம் எண்காரர்கள் அதே 8 ஆம் எண்காரரைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. இது நிறையவே பிரச்சினைகளை ஏற்ப டுத்தும்.

பொதுவாகவே 8 ஆம் எண்காரர் களைப் பற்றிச் சொல்வதென்றால் போராட்டம் நிறைந்த ஓர் எண்ணா கவே இதைக் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் எந்த ஒரு காரியத்தைச் செய் தாலும் அதில் போராடித்தான் வெற்றி பெற வேண்டும்.

8 ஆம் எண்ணைக் கட்டுப்படுத் தக் கூடிய ஓர் எண் என்றால் அது 5 ஆம் எண்தான்.

இவர்கள் மற்றவர்களோடு பழ கும் விதத்தில் எல்லோரையும் மிக எளிதில் கவர்ந்து விடுவார்கள். இத னால் பெரிய, பெரிய பதவிகளில் உள்ளவர்கள் கூட இவர்களிடம் பிரி யமாகப் பழகுவார்கள்.

நாட்டியக் கலைஞர்கள், சங்கீத வித்வான்கள், மந்திரவாதிகள், சோதி டர்கள், கைரேகை நிபுணர்கள் போன் றோர் இவர்களுடைய நண் பர்களாக இருப்பது போல், உயர்ந்த பதவிகளில் இருக்கும் அரசியல் வாதிகளும் செல் வந்தர்களும் இவர் களின் நெருங்கிய நண்பர்களாக இருப்பார்கள்.

இவர்களிடத்தில் இருக்கும் கல் வித்தகைமையும் பேச்சுத் திறனும் தான் இதற்குக் காரணமாக இருக் கும். இவர்கள் வழக்காடுவதில் மிகவும் வல்லவர் களாக இருப்பார்கள்.

4 ஆம் எண் காரர்களும் 1 ஆம் எண்காரர்களும் இந்த எண்காரர் களின் வாழ்வில் அடிக்கடி சங்கம மாவதுண்டு. அதேபோல் இவர்கள் என்னதான் பொய் பேசினாலும் ஜக ஜாலங்கள் செய்தாலும் இவர் கள் வாழும் சுற்றுப் புறங்களில் இவர்க ளுக்கு நல்ல செல்வாக்கு இருக்கும். இப்படி ஒரு ராசி இந்த எண்காரர் களுக்கு மட்டுமே உண்டு.

இந்த எண்காரர்களின் பேச்சில் கவர்ச்சி அதிகம் இருப்பதால் தான் இந்த எண்காரர்களில் பலர் அரசி யல்வாதிகளாக இருக்கிறார்கள்.

வாழ்வில் உயர் நிலையை அடைய வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்களாக இருப்பார்கள். அதேபோல், பெரிய பெரிய பதவி களை வகிக்க வேண்டும் என்றும் ஆசைப்படுவார்கள். ஒரு சிலர் அவர் கள் எண்ணியதைப் போலவே உயர் பதவிகளை அடைவதும் உண்டு.

கலை உள்ளம் கொண்ட இவர் கள் ஒரு விடயத்தைப் பற்றி நன்றா கவே நேர் அர்த்தத்துடன் பேசி இருப் பார்கள்.

இவர்களுக்கு பகையான எண் கள் 3,7,9.

3ஆம்எண்காரர்கள் இவர்களுக்கு ஜென்மப் பகையான எண்காரர் கள்.

போராட்டம் என்பது இவர்களது வாழ்வில் பொக்கிஷம் போன்றது.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### பப்பாசி

Botanical Name- Carica papaya

Family-Caricaceae


Engl-Papaya

Sinh-Gas Labu

இது ஒரு சிறு மரம். இம்மரம் 6-7.5 மீற்றர் உயரம் வரை வளரக் கூடி யது. பெரும்பாலும் தண்டு கிளைக் காமல் முடிவில் இலைகளை நெருக் கமாகக் கொண்டிருக்கும். அங்கை வடிவ மடல்களை உடைய தனி யிலைகள் 90 செ.மீ நீண்ட காம்பு துளை உடையது. இதில் பல இரகங் கள் ஒரு பால் பூக்களை (பெண் பூக்கள் தனி மரத்திலும் ஆண்பூக் கள் தனி மரத்திலும் உண்டாகும்) கொண்டிருக்கும். பெண் பால் பூக் கள் உண்டாகும் மரங்களில்தான் காய்கள் உண்டாகும்.

(மகரந்தச்சேர்க்கை, கருச்சேர்க் கைக்குப் பின்பு) தற்போது சில இரகங்களில் ஆண், பெண் பால் பூக்கள் இரண்டுமே ஒரே மரத்தில் உள்ளன.

கனிகள் தண்டின்மேல் முனை யில் இலைகளின் அடியில் நெருக் கமாக அமைந்திருக்கும். விதைகள் பல கருமை சாம்பல் நிற மூடை யவை. மலர்களும் கனிகளும் வருடம் முழுவதும் காணப்படும்.



### பரம்பலும் இனவிருத்தியும்

பப்பாளி மரம் எங்கும் பயிரா கும். இதற்கு தண்ணீர் விட்டு வளர் க்க வேண்டியதில்லை. வளமான மண்ணில் செழித்துவளரும்.

விதை கள் மூலம் நாற்றுக்களை உண்டாக்கி 0.5×0.5×0.5 மீற்றர் அள வுள்ள குழிகளில் 2× 2 மீற்றர் இடை வெளிகளில் கன்றுகளை நடவும்.

நாற்றுவிட்ட 5 தொடக்கம் 6 மாதங் களில் பூக்கள் உண்டாகி 9 தொடக்கம் 10ஆவது மாதங்களில் காய்கள் உண்டாகும்.

100 கிராம் பப்பாளிக்காய் மற்றும் பழத்திலுள்ள சத்துக்கள்

| சத்துக்கள் | காய்கள் | பழங்கள் |
|---|---|---|
| புரதம் (கி) | 0.7 | 0.6 |
| கொழுப்பு (கி) | 0.2 | 0.1 |
| நார்ப்பொருள் (கி) | 0.9 | 0.8 |
| காபோவைதரேற்று (கி) | 5.7 | 7.2 |
| கல்சியம் (மி.கி) | 28 | 17 |
| பொஸ்பரஸ் (மி.கி) | 40 | 13 |
| இரும்பு (மி.கி) | 0.9 | 0.5 |
| தயமின் (மி.கி) | 0.01 | 0.04 |
| ரைபோபிளேவின்(மி.கி) | 0.01 | 0.25 |
| விற்றமின் சி (மி.கி) | 12 | 57 |
| மக்னீசியம் (மி.கி) | -- | 11 |
| கரோட்டீன் (மை.கி) | -- | 666 |

### மருத்துவப் பயன்கள்

தினசரி ஒன்றிரண்டு துண்டு பப்பாளிப் பழத்தைச் சாப்பிட்டு வந் தால் உடலில் நல்ல பலம் ஏற்படும். பழம் சாப்பிடும் காலத்தில் இரவு படுக்கைக்குப் போகும் முன் ஒரு டம்ளர் அளவு காய்ச்சிய பசும்பாலை குடித்து வரவேண்டும். தொடர்ந்து 40 நாட்கள் இப்படிச் சாப்பிட்டால் உடலில் எந்த வகையான நோயும் தாக்காது. பப்பாளி பழத்தில் நுண் ணிய நோய்க்கிருமிகளை கொல் லும் சக்தி மிகுந்திருப்பதால் தொற்று நோய் பரவிவரும் காலத்தில் கூட இதனைப் பயன்படுத்தலாம். இறைச்சி வகைகளை உண்ணும் போது மதிய உணவிற்கு பின் இரண்டு துண்டு பப்பாளிப்பழத்தை உண்டால் அதில் காணப்படும் Papain எனும் இர சாயணப் பொருள் புரதச் சமிபாட்டை தூண்டி செரிப்பை இலகுவாக்கும்.

இறைச்சியை மென்மைப்படுத்த வும் இது பயன்படும். உதாரணமாக ஆட்டிறைச்சி சமைக்கும்போது ஓரிரு துண்டு பப்பாளிக்காயை அத் துடன் சேர்த்துக்காய்ச்சினால் இறை ச்சி மிகவும் மென்மையாகி சுவை யாக இருக்கும். பப்பாளிப்பழம் சாப் பிட்டபின் அதிக பசி எடுக்கும். இது பழத்திற்கு உள்ள சீரணத்தை மிகு திப்படுத்தும். தன்மையை வெளிக்காட் டுகிறது. பப்பாளிப் பழம் ஈரலைப் பலப்படுத்தக்கூடியது. பப்பாளிப் பழத் துடன் சீனி, சிறிதளவு சிற்றிக் கமி லம் சேர்த்து ஜாம் செய்தும் சாப்பிட லாம். இது உடல் வளர்ச்சிக்கு மிக வும் இன்றியமையாத பழமாகும். மூல நோயுடையவர்களும் தினமும் 100 கிராம் பப்பாளிப் பழத்தை உண்ண லாம். கர்ப்பிணித்தாய்மார் கள் முதல் 6 (ஆறு) மாதங்கள் வரை பப்பாளிப் பழம் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண் டும். இதன் காயை சமைத்துச் சாப் பிட்டு வந்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்த தர்மத்திற்கு எதிரானவையாக பொதுபல சேனாவின் செயற்பாடுகள்

## வன்மையாகக் கண்டிக்கிறது த.தே.கூட்டமைப்பு

(குருமன்காடு)

எமது ஆயர்கள் அரசியல் செய்யவில்லை. அவர்கள் எமது அரசியலுக்கு பொதுவான கருத்துக்களை முனவைப்பதோடு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க மேற்கொள்ள வேண்டிய சகல பிரச்சினைகளையுமே முன் வைக்கின்றனர். இந்த நிலையில் அவரை அரசியல் ரீதியாக தொடர்புபடுத்தி பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது" என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஆயர்கள் தொடர்பாக பொது பல சேனா அமைப்பு தொடர்ந்தும் வெளியிட்டு வரும் கருத்துக்களை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களுக்கு எதிரான கருத்துக்களை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் நேற்று முன் தினம் விடுத்துள்ள அறிக்கையில மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மன்னார் மற்றும் யாழ்.மறை மாவட்ட ஆயர்கள் தமிழ் மக்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக மக்களின் மீள் குடி யேற்றத்தில் உள்ள பிரச்சினைகள், இந்திய வீட்டுத்திட்டம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனவர்களை கண்டுபிடித்தல் போன்ற மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலேயே அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வை பெற்றுக் கொடுக்காத நிலையிலே அவர்கள் இப்பிரச்சினைகளை சர்வதேசம் வரை கொண்டு சென்றுள்ளனர்.

காரணம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்பதேயாகும்.

இறுதியாக மன்னார், யாழ். மறை மாவட்ட ஆயர்கள் இருவரும் தேசத் துரோக குற்றங்களை புரிந்திருப்பதாகவும் அவர்கள் இருவரையும் கைது செய்ய வேண்டும் என அந்த பொது பல சேனா அமைப்பு பொலிஸாரிடம முறைப்பாடு செய்துள்ளது.

இவர்களுடைய இந்த செயற்பாடுகளை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுபல சேனா அமைப்பின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எமது ஆயர்கள் அரசியல் செய்ய வில்லை. அவர்கள் எமது அரசியலுக்கு பொதுவான கருத்துக்களை முன்வைப்பதோடு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க மேற்கொள்ள வேண்டிய சகல பிரச்சினைகளையுமே முன் வைக்கிறனர். இந்த நிலையில் அவரை அரசியல் ரீதியாக தொடர்புபடுத்தி பேசுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே பொது பல சேனா என்ற இந்த இனவாத அமைப்பு பௌத்த மத கோட்பாடுகளை மீறி செயற்படுகின்றது. புத்த தர்மத்திற்கு எதிராக செயற்படுகின்றது.

அரசாங்கத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காடையர் குழுவாகவே இந்த மக்கள் பொதுபல சேனா அமைப்பை பார்க்கின்றனர். தமிழ் மக்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வரும் எமது ஆயர் கள் தொடர்பாக பொது பல சேனா அமைப்பு வெளியிட்டு வரும் கருத்துக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிப்பதோடு எதிர்வரும் காலங்களில் அவர் கள் இவ்வாறான கருத்துக்களை வெளியிடும்போது சற்று சிந்தித்து செயற்பட வேண்டும்" என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-250)

# மேதினக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழிலாளர் ஒத்துழைப்புக்குழுவின் மேதினக் கூட்டம் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள டி.சீ.எம். தனியார் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது தொழிற்சங்க மற்றும் அமைப்பைச் சார்ந்தோரின் உரை நிகழ்வுகள் இடம் பெறும்.

இதற்கமைய தொழிற்சங்க மற்றும் அமைப்பைச் சார்ந்தோரால் தொழிலாளர் நலன் சார் நியதி சட்டங்களை உடன் அமுல்படுத்துவது, விலைவாசி உயர்வுக்கேற்ப சம்பள உயர்வை வழங்குவது, ஊழியர்களின் ஓய்வூதியத்தை மீண்டும் வழங்குதல், தொழிலாளர் சாசனத்தை அமுல்படுத்தல், தொழிலாளர் நட்டஈட்டினை வழங்குவது தொடர்பான உரைகள் நிகழ்த்தப்படவுள்ளன. (2)

## சிவனொளிபாத மலைக்கு

# யாத்திரை சென்ற ஒருவர் பலி; 3 பேர் காயம்

(கொழும்பு)

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற நான்கு பேரும் பாதையிலிருந்து வழுக்கி விழுந்ததில், ஒருவர் உயிரிழந்து மூவர் காயமடைந்துள்ளனர்.

சிவனொளிபாதமலை கொளுதென்ன மற்றும் இதிகட்டுபான பகுதிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் பாதையிலிருந்து வழுக்கி விழுந்து நான்கு பேரும் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்தில் அம்பலாங் கொடையை சேர்ந்த 82 வயதான நபரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவர் டிக்கோயா வைத்தியசாலையிலிருந்து கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் இருவர் டிக்கோயா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களுக்கு பெரிய பாதிப்பு இல்லை எனவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். மரண.விசாரணைக்காக உயிரிழந்தவரின் சடலம் மஸ்கெலியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# மின்னிணைப்பை வழங்குவதற்கு கடன் உதவித்திட்டம் அறிமுகம்

## இன்று ஆரம்பம்

கிராமப்புறத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை முன்னேற்றும் மஹிந்த சிந்தனை தொலைநோக்குக்கு இணைவாக அவர்களுக்கு மின் இணைப்பை வழங்குவதற்காக கடன் உதவித் திட்டம் அறிமுகம் செய்யப்படும்.

அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சியின் ஏற்பாட்டில் இன்று ஆரம்பிக்கப்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மின்சார சபை இத்திட்டத்தை மேற்கொள்ளும்.

இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 3.5 மில்லியன் அமெரிக்க டொலர் தீர்வையற்ற நிதி அனுசரணையை வழங்கும்.

முதற்கட்டமாக அம்பாந்தோட்டை, அம்பாறை, இரத்தினபுரி மாவட்டங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

ஒரு குடும்பத்துக்கு 40ஆயிரம் ரூபா கடன் உதவி வழங்கப்படும்.

இத்தொகை தவணை அடிப் படையில் ஆறு வருடங்களில் திருப் பிச் செலுத்த வேண்டும்.

புதிய மின் இணைப்புக்களை பெறுவதற்காக அருகிலுள்ள மின்சார பொறியியலாளர்களைச் சந்தித்து கடன் உதவிக்கான விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என கடன் திட்டத்துக்கு பொறுப்பான முகாமையாளர் ஜயந்த சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

வீடுகளில் உள்ள வயரிங். மின் இணைப்பு பெற்றுக்கொள்ள இந்தப் பணத்தைப் பயன்படுத்தலாம்.

2014 வருட இறுதிக்குள் நாட்டில் மின் சார வசதி இல்லாத சகல வீடுகளுக்கும் மின் சாரத்தை வழங்க வேண்டுமென்பது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவாகும்.

இந்த உத்தரவின் பேரில் மின்சக்தி எரிசக்தி அமைச்சு பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. (2)

# நிதி குற்றச்சாட்டை நிரூபித்துக் காட்டுங்கள்

## முஸ்லிம் கவுன்சில் பொதுபலசேனாவுக்கு சவால்

அமெரிக்காவில் இருந்து நிதி பெற்றுக் கொள்வதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நிரூபித்துக் காட்டுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் பொதுபல சேனா அமைப்புக்கு சவால் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் அறிக்கை ஒன்றினையும் விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் அமெரிக்காவிடம் இருந்து நிதி பெற்று வருவதாக பொது பல சேனா அண்மையில் குற்றம் சுமத்தி இருந்தது.

இந்நிலையில் இதற்கு ஆதாரங்கள் இருக்குமாக இருந்தால் அதனை உடனடியாக முன்வைத்துக் காட்டுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் சவால் விடுத்திருக்கிறது.

பொதுபல சேனா இலங்கையில் அனைவராலும் மதிக்கப்படும் பௌத்த உடையில் இருந்து கொண்டு அடாவடித்தனங்களை புரிந்து வருவதாகவும் அந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் குற்றம் சுமத்தியுள்ளது. (2)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 64 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L, HNDA – Following / வங்கி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3049 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 41<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc, SLAS / அரச உயர் உத்தியோகம்<br>தொ.இ: G/3059 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 44.75<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L (பிரான்ஸ்)<br>தொ.இ: B/3053 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 30, உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: G/3062 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 63, உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Com, NDT, கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: B/3055 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 12.75 , உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/3063 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 65 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / அரச வரி வசூலிப்பாளர்<br>தொ.இ: B/3056 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 44 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Com / ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/3065 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலும் எதிர்பார்ப்பும்...

மக்களாட்சி முறையில் பொதுத் தேர்தல் என்பது வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளை மக்களவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பி, அவர்களில் பெரும்பான்மையரால் பிரதம மந்திரி தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருடைய அமைச்சரவை அரசு நிர்வாகத்தை வழி நடத்துவது மட்டுமல்லாமல், மக்களுக்குத் தேவையான சட்ட திட்டங்களையும் தேவைகளையும் நிறைவேற்ற வகை செய்யப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்து நாட்டில் ஆரம்ப காலத்தில் அரசர் பார்த்து எவரையும்- அவர் பாரம்பரிய பிரபுவாக இருக்கலாம் அல்லது மன்னருடைய நம்பிக்கையைப் பெற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகவும் இருக்கலாம்- பிரதமராக நியமிக்க முடியும். அப்பொழுது பிரபுக்களின் ஆலோசனையின் படிதான் மன்னர் ஆட்சி செய்தார். ஆயினும் மன்னருக்கும் அரசாங்கத்துக்கும் தேவையான நிதிகள் தேவைப்பட்டபொழுது மக்கள் பிரதிநிதிகளை அழைத்து வரிகளை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அவைக்கு சாமான்யர்கள் சபை (ஹவுஸ் ஒவ் காமன்ஸ்) என்ற பெயர்தான் இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தில் இன்றளவும் நீடிக்கிறது.

17 ஆம் நூற்றாண்டில் சாமான்யர் சபையில் இருந்த மக்கள் பிரதிநிதிகளுக்கும்- ஸ்டூவர்ட் மன்னர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவு இருவரிடையே கடும் போராக மாறி, முடிவில் சாமான்யர் சபையின் அதிகாரம் அதிகரித்தது. வரவு செலவுகளை நிர்ணயிப்பது, முக்கியமான சட்ட திட்டங்களை முடிவு செய்வது ஆகியவை சாமான்யர் சபையின் தனிப்பட்ட அதிகாரமாகின.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கிலாந்தில் பிரபுக்கள் சபைக்கும் சாமான்யர் சபைக்கும் மீண்டும் ஒரு பெரும் போராட்டம் ஏற்பட்டு, கடைசியில் முடிவு ஏற்பட்டது. அதாவது, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வரும் பொதுத்தேர்தலில் சாமான்யர் சபையில் பெரும்பான்மை பெற்றிருப்பவரும் அந்த அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவும் உள்ள ஒருவர்தான் பிரதமராக ஆக முடியும் என்பதாகும்.

மாமன்னர் பரம்பரைக்குத் தெரிந்தவர், பிரபு வம்சத்தில் பிரபலமானவர் என்று பிரதம மந்திரியாக முன்பு இங்கிலாந்தில் இருந்த நாடாளுமன்ற நிலைமை அடியோடு மாறி விட்டது.

இங்கிலாந்து நாடாளுமன்ற அரசியலில் பிரதம மந்திரி பற்றி எடுக்கப்பட்ட முடிவை கடந்த நூற்றாண்டு காலத்தில் இம்மியும் மாறாது கடைப்பிடித்து வருகிறார்கள். அதனால்தான் நாடாளுமன்ற ஜனநாயகம் இன்றும் அங்கு நலிவடைந்து விடவில்லை.

பிரதம மந்திரி பற்றி இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவைப் பற்றி இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தில் தெளிவான முடிவை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை 1966 ஏப்ரல் மாதம் இந்திய நாடாளுமன்றத்திலும் கிளம்பியது.

1966 ஜனவரி மாதத்தில் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி மறைந்த பின்னர் காங்கிரஸ் தலைவர் காமராஜரின் முயற்சியால் இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராக ஆனார். 1966 இல் அமைந்த லால்பகதூர் சாஸ்திர மந்திரிசபையில் இந்திரா காந்தி செய்தி- ஒலிபரப்புத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது அவர் நாடாளுமன்ற இரு அவைகளில் எதிலும் உறுப்பினராக இல்லை. எனவே, அப்பொழுது 1964 ஏப்ரல் மாதத்தில் மாநிலங்களவை உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மக்களவையில் உறுப்பினராக இல்லாதவர் பிரதமராக பொறுப்பேற்கக் கூடாது என்று அரசமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவரும் தனிநபர் மசோதாவை இந்திய அரசியல் நிர்ணய சபையில் பெரும் பங்கு வகித்த ஹெச்.வி.காமத் மக்கள் சபையில் முன்வைத்தார். அதன்படி, பிரதமராகப் பதவி ஏற்பவர் மக்களவையில் உறுப்பின ராக இருத்தல் வேண்டும் என்றும், உறுப்பின ராக இல்லாதவர் ஆறு மாதத்திற்குள் தேர்த லில் போட்டியிட்டு மக்களவை உறுப்பினராக வேண்டும் என்றும் கோரப்பட்டது. அதன்மீது விவாதம் 1966 ஏப்ரல் மாதத்தில் நடந்தது.

இந்த விவாதத்தில் 32 பேர் கலந்துகொண்டனர். அதில் 19 காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களில் ஒருவர் தவிர, ஹரீஷ் சந்திர மாத்தூர், ஆர்.கே. கடில்காரர் உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் மிகவும் அழுத்தமாக காமத் முன்வைத்த மசோதாவின் அடிப்படையான நாடாளுமன்ற முறையை ஆதரித்தனர்.

ஹெச்.வி. காமத் மசோதாவின் கொள்கையை காங்கிரஸ் தலைவர்கள் முழுமையாக வரவேற்பதாகவும் ஆனாலும் அதை அரசமைப்புச் சட்டத் திருத்தமாக உடனடியாக ஆக்காமல் குறுகிய கால அளவுக்கு வைத்துக்கொண்டு, இங்கிலாந்து கடைப்பிடிக்கும் முடிவை நாமும் ஒரு மரபாக (கன்வென்ஷன்) வைத்துக் கொள்ளலாம் என்பதாகவும் காங்கிரஸ் தரப்பில் கூறப்பட்டது.

1967, 1971 தேர்தல்களில் இந்திரா காந்தி போட்டியிட்டு மக்களவை உறுப்பினராக வந்தார். அதனால் காமத் எழுப்பிய கோரிக்கை ஒரு மரபாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக ஆனது.

1991 இல் பி.வி. நரசிம்மராவ் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது நாடாளுமன்றத்தின் எந்த அவையிலும் அவர் உறுப்பினராக இல்லை. ஆயினும் ஆறு மாத காலத்திற்குள் இடைத்தேர்தலில் போட்டியிட்டு பெருவாரியான வாக்குகளில் அவர் மக்கள் சபை உறுப்பினராக ஆனார்.

மாநிலங்களவை உறுப்பினர் ஒருவர் பிரதமராக தொடர்ந்த அவலம் 1996 இல் ஏற்பட்டது. ஐக்கிய முன்னணி அரசின் பிரதமராக 10 மாதங்கள் பதவி வகித்த தேவ கௌடா மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார். ஆனால், தொடர்ந்து பத்து ஆண்டுகள் மாநிலங்களவை உறுப்பினர் ஒருவர் பிரதமராகத் தொடர்ந்தது மன்மோகன் சிங்தான்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கட்சி என்ற சொல் எந்த இடத்திலும் வரவில்லை. எனவே, சட்டப்படி தேர்தலில் கட்சிகளின் சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. 543 இடங்களையுடைய மக்கள் சபைக்கான தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் ஒருமித்து, கட்சிகள் சார்பற்ற 543 நபர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவிடலாம்.

அந்த 543 பேரில் 273 க்கு மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவரைக் குடியரசுத் தலைவர் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுத்து விடலாம். அத்தகைய பிரதமர் நாடாளுமன்றத்தின் பெரும்பாலான ஆதரவு நீடித்திருக்கும் வரை மந்திரிசபை அமைத்து அரசாங்கத்தை நடத்தலாம்.

ஆயினும் 1952 இல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் ஆளுங்கட்சியான காங்கிரஸ் கட்சியும் மற்ற அரசியல் கட்சிகளும் தத்தம் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளைத் தந்து வாக்காளர்களின் ஆதரவைப்பெற முற்பட்டன. வேட்பாளர்கள் போட்டியிடுவதற்கான விதிமுறைகளையும் இந்தியத் தேர்தல் ஆணையம் வகுத்தது. அரசியல் கட்சிகளை தேசிய அளவில், மாநில அளவில் அங்கீகாரம் பெற்ற கட்சிகள் என்று நிர்ணயம் செய்தது.

அந்த வகையில் 1957 தேர்தலில் 4 தேசியக் கட்சிகள், 15 மாநிலக் கட்சிகள் இருந்தன. தற்போது 2014 இல் 6 தேசியக் கட்சிகள், 54 மாநிலக் கட்சிகள், 1,563 அங்கீகாரம் பெறாத கட்சிகள் தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றன எனத் தெரிகிறது. இவைகளில் எந்தக் கட்சி மக்கள் சபையில் பெரும்பான்மை பலத்தைப் பெறும் அல்லது பெரும்பான்மை பலத்தை எட்டிப் பிடித்து ஆட்சி அமைக்கும் என்பது தேர்தல் முடிவுகள் வெளியாகும்போதுதான் தெரியவரும்.

1989 க்குப் பிறகு நடைபெற்ற எந்த பொதுத் தேர்தலிலும் தனிப்பட்ட எந்த ஒரு கட்சியாலும் மக்கள்சபையில் பெரும்பான்மையான பலத்தைப் பெற்று மத்திய அரசாங்கத்தை அமைக்க முடியவில்லை.

எல்லாவற்றையும்விட பொதுத்தேர்தலில் போட்டியிடாத ஒருவர், அதற்கு முன்பு போட்டியிட்டபோது வெற்றி பெறும் வாய்ப்பைத் தவறவிட்ட ஒரு மகானுபாவர் தேர்தலுக்கு பிறகு பிரதம மந்திரியான விசித்திரம் 2004 இல்தான் நடந்தது.

1946 முதல் 1949 வரை ஆலோசனை செய்த இந்தியாவின் அரசியல் நிர்ணய சபை, இங்கிலாந்து நாட்டில் வேரூன்றிய நாடாளுமன்ற நடைமுறையின் அடிப்படையில் இந்தியாவின் அரசமைப்பை உருவாக்கியது. இங்கிலாந்து நாட்டில் மரபு வழியாக நாடாளுமன்ற ஜனநாயகம் கடைப்பிடிக்கப்பட்டு நிலைபெற்றிருக்கிறது. அதேபோல் 1966 இல் காங்கிரஸ் உறுப்பினர்களாலும் காங்கிரஸ் அரசாங்கத்தாலும் கடைப்பிடிக்கப்பட்ட மரபுமுறை 2004 முதல் 2014 வரையான பத்தாண்டு காலத்தில், கற்பனையாய், கனவாய், பழங்கதையாய்ப்போய் கைவிடப்பட்டுவிட்டது.

இந்தியாவில் வாக்காளர்கள் பெரும் அளவில் ஒரு கட்சிக்கு அல்லது கட்சியின் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு தருவதால் மட்டும் நாடாளுமன்ற நடவடிக்கைகளின் மூலம் வாக்காளர்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதிகளும், அதற்கும் மேலாக நாடாளுமன்றத்தின் மாண்பும், மக்களாட்சி முறையின் அடிப்படையான உரிமைகளும் காப்பாற்றப்பட்டுவிடும் என்று சொல்லிவிட முடியாது.

உதாரணமாக, அஜித் சிங் தலைமையிலான ராஷ்ட்ரிய லோக் தளம் கட்சியை ஆரம்பித்தார். 2009 பொதுத் தேர்தலில், பா.ஜ.கவுடன் ஆர்.எல்.டி. இணைந்து அதற்கு ஒதுக்கப்பட்ட ஏழு மக்களவைத் தொகுதிகளில் போட்டியிட்டது. ஐந்து தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களும் போட்டியிட்டனர். தேர்தல் முடிவில் போட்டியிட்ட ஏழு மக்களவைத் தொகுதிகளில் ஆர்.எல்.டி. ஐந்து தொகுதிகளில் பிரமிக்கத்தக்க அளவில் வெற்றிபெற்றது.

அஜித் சிங் கட்சியின் ஐந்து வேட்பாளர்களுக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 13,94,203 அவர்களை எதிர்த்து நின்ற காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்கள் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை வெறும் 3,81,936.



இது காங்கிரஸ் கட்சியின் கூட்டணி ஆட்சியின் மீது, காங்கிரஸ் கட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்ட அவநம்பிக்கையின் வெளிப்பாடு என்றுதான் கருதப்பட வேண்டும்?

ஆனால், 2012 டிசெம்பர் 12 ஆம் திகதி காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான இரண்டாவது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அஜித் சிங் ஐக்கியமானார். அமைச்சரவையில் விமானத்துறை அமைச்சராக அவருக்கு பதவி தரப்பட்டது. இதுவரை தொடர்ந்து அமைச்சராக இருந்து வருகிறார்.

அப்படியானால், ஐந்து நாடாளுமன்றத் தொகுதிகளில் அஜித் சிங் கட்சிக்கு ஆதரவாகவும் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராகவும் வாக்களித்த 13 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்களின் நம்பிக்கை பொய்த்தது என்றுதானே பொருள்? அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றுதானே சொல்ல வேண்டும்!

ஐந்தாண்டுக்கு ஒரு முறை மக்களுக்குக் கிடைக்கும் பெரும் வாய்ப்பு, அவர்கள் பெரும் எதிர்பார்ப்புகளுடன் வழங்கும் ஆதரவு, நாட்டின் எதிர்காலத்திற்கும் நாடாளுமன்றத்தின் ஜனநாயக ஆட்சிமுறைக்கும் மாட்சி தரும் நல்வாய்ப்பாக இருக்க வேண்டுமே தவிர நம்பிக்கை துரோகமாகிவிடக் கூடாது.

மரபுகள் பின்பற்றப்படுவதில்லை. நாடாளுமன்றத்தின் கௌரவம் காப்பாற்றப்படுவதில்லை. மக்களின் எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் அரசியல் கட்சிகளாலும் உறுப்பினர்களாலும் மதிக்கப்படுவதில்லை.

அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களால் இந்திய ஜனநாயகம் வேரூன்றித் தழைத்த நாட்களையும் அவசரநிலை கால எதேச்சதிகாரப் போக்கை முறியடித்து மக்களாட்சியை மீட்டெடுத்த நாட்களையும் பார்த்த இன்றைய நாடாளுமன்றத்தின் தரத்தையும் செயற்பாடுகளையும் பார்த்து வேதனைப்படுவதல்லாமல் வேறென்ன செய்ய முடியும்?

மனித இனம் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில்தான் நடைபோடுகிறது. 14 ஆவது மற்றும்15 ஆவது நாடாளுமன்றங்களின் செயற்பாடுகளும், நிர்வாகத்தின் நடைமுறைகளும் பாராட்டும்படியாக இருக்கவில்லை. 1977 இல் மக்கள் மன்றம் ஆறாவது மக்களவைத் தேர்தலில் அளித்த தீர்ப்பின் மூலம் எதேச்சதிகாரப் போக்குக்கு வித்திட்ட அவசரநிலைச் சட்டத்தை அகற்றியது. இந்திய ஜனநாயகத்தைப் பீடித்திருக்கும் அவலத்தை வேரறுத்து, மீண்டும் நிஜமான மக்களாட்சியை மலரச் செய்யுமா நடந்து முடிந்த 16 ஆவது மக்களவைத் தேர்தல்? எதிர்பார்ப்புகளுடன் அனைவரும் காத்திருக்கிறோம்.

இணையம்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கசினோ நிறைவேறினாலும் செயற்படுத்த இடமளியோம்

## ஜே.வி.பி. விடாப்பிடி

**நாடாளுமன்றத்தில் வர்த்தமானி அறிவித்தல்களை நிறைவேற்றி கசினோ திட்டத்தை நிறைவேற்றினாலும் அதனைச் செயற்படுத்த இடமளிக்கப் போவதில்லை என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. இதனைப் புரிந்து கொண்டுள்ள மக்களுடன் இணைந்து அரசாங்கத்தின் சமூக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

கசினோ வர்த்தக திட்டத்திற்கு வரையறையற்ற வரிச் சலுகையை' வழங்குவதற்காகவே மூலோபாய அபிவிருத்தி சட்ட மூலத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் கொண்டு வரப்பட உள்ளதாக நாங்கள் முன்னதாகவே கூறியிருந்தோம்.

2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதியுடன் அரசாங்கம் இதே வர்த்தமானி அறிவித்தலை கொண்டு வந்ததுடன் எதிர்ப்புகள் காரணமாக தற்காலிகமாக பின்வாங்கி கொண்டது.

இலங்கை முதலீட்டுச் சபை சம்பந்தப்பட்ட கசினோ நிறுவனத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமையவே இந்த வர்த்தமானி கொண்டு வரப்பட்டது.

அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, நிதியமைச்சர் உட்பட அமைச்சரவையில் உள்ளவர்கள் அந்த கசினோ சூதாட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

இலங்கையின் கசினோ சூதாட்டத்தை மூலோபாய அபிவிருத்தித் திட்டத்திற்குள் கொண்டு வந்து வரையறையற்ற வரிச் சலுகையை வழங்க வேண்டும் என்பதை அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

இதனால் புதிய வர்த்தமானியில் கசினோ சூதாட்ட திட்டம் இல்லை என்று ஜனாதிபதியினால் கூறமுடியாது.

அரசாங்கம் அண்மையில் கொண்டு வந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களும் எதிர்த்து வாக்களித்துள்ளதுடன், பலர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் தமது எதிர்கால அரசியல் பற்றி சிந்தித்தனர். சிலர் தமது தனிப்பட்ட எதிர்கால அரசியல் குறித்து சிந்தித்தனர்.

எவ்வாறாயினும், கடந்த மாகாண சபைத் தேர்தலில் மக்கள் வழங்கிய பதில் காரணமாக அவர்களால் அரசங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க முடிந்துள்ளது. அரசாங்கத்தின் 52 நாடாளு மன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப் பில் கலந்து கொள்ளாது எதிர்ப்பை காட்டியுள்ளனர்.

அரசாங்கத்தின் பெரும்பான்மை பலம் குறைந்துள்ளது. அரசாங்கம் வீழ்ந்து வருகிறது. இதனால் அரசாங்கம் தனது தேர்தல் திட் டங்களை கூட சுருட்டிக் கொள்ள நேர்ந்துள்ளது. அரசாங்கம் தனது இருப்பு குறித்து மீண்டும் சிந்தித்தித்து பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சியை அரச மாளிகையில் உள்ள சோதிடர்களுக்கோ, அங்குள்ள கிளிகளுக்கோ நிறுத்தி விட முடியாது.

அரச மாளிகை கிளிகள் எவ்வளவு சத்தமிட்டாலும் அங்குள்ள சோதிடர்கள் எவ்வளவு ஜாதங்களை பார்த்தாலும் அரசாங்கத்தின் வீழ்ச்சியை நிறுத்த முடியாது எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டார். (2)



பஹ்ரேனுக்கு மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை பஹ்ரேன் சர்வதேச விமான நிலை யத்தை சென்றடைந்தார். இதன்போது இலங்கை ஜனாதிபதிக்கு பஹ்ரேன் பிர தமர் ஹமட் அல் காலிபா கைலாகு வழங்கி வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்க இடமளியோம்

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

எந்த வகையான பலசேனாக்கள் உருவெடுத்தாலும் நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் செயற்படுபவர்களுக்கு இடம் கொடுக்கமாட்டோம் என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பதுளை உதைபந்தாட்ட மைதானத்தில இடம்பெற்ற 'ரட்டவிருவோ' சித்திரைப் புத்தாண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

டொலர்களுக்க்ாக அல்லது பவுண்களுக்காக பொதுபலசேனா முன் வந்தாலும், தினார்களுக்கும், ரியால்களுக்குமென்று முன்வரும் தேசிய பலசேனா வென்றாலும் சரி இந்த நாட்டில் தேசிய ஒற்றுமையை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க மாட்டோம்.

இந்த நாட்டின் சரித்திரத்தில் கிடைத்த மிக உயர்ந்த பௌத்த தர்மத்தை விற்பதும் பௌத்த தர்மத்தை கூறுபோட்டு அவர்களின் சட்டைப் பைகளை நிரப்புவதுமே இந்த சேனாக்களின் வேலையாகும்.

இவ்வாறானவர்கள் இங்கு வந்து பார்க்கட்டும் இங்கு சிங்களவர், தமிழ மற்றும் முஸ்லிம்களிடையே என்ன வேறுபாடு இருக்கிறது என்று.

நீங்கள் எந்த பெயரில் என்ன சேனாவை அமைத்தாலும் சரி அவைகளைவிட மிக மதிக்கத் தக்க கௌரவமான சேனாக்கள் இங்கு தான் உருவாகுகின்றன. பொதுபலசேனா, ஜாதிகபலசேன என்ற பெயர்களின் எந்தப் பெயரி லும் வந்தாலும் இந்த நாட்டின் ஐக் கியத்தை சீர்குலைக்க இடமளிக்க முடியாது.

பௌத்த தர்மத்தை சரியாக புரிந்து நடைமுறைப்படுத்தும் பௌத்த மத குருமார்களை தலைமேல் வைத்து மதிக்கின்றேன்.

அவ்வாறான பௌத்த மதகுருமார்களை நாம் என்றும் மதிப்போம. மக்களை கூறுபோடும் எந்த ஒரு சேனாவிற்கும் இந்த நாட்டில் இடமில்லை என்றார். (2)

# இன்று ஒரு தகவல்

## சகாதேவன் வழங்கிய நீதி

ஆன்மீகச் சொற்பொழிவாளர் ஒருவர், " ஒரு ஞானி எப்படியிருப்பார்? " என்ற கெள்விக்கு விளக்கம் கொடுத்தார்.

"ஞானி எப்படி இருப்பார் என்று கேட்டால், மகாபாரதத்தில் வரும் சகாதேவன் போன்று இருப்பார்" என்பது அவருடைய பதில்.

ஒரு ஞானி நீதியை மட்டும் தான் பார்ப்பார். அது தன்னுடைய சொந்தக்காரர்களையோ, தனக்கு வேண்டியவர்களையோ எப்படிப் பாதிக்கிறது என்ப்தைப்பற்றி அவர் கவலைப்பட்டார்.

அவருக்கு நீதி மட்டும் தான் முக்கியம்.

சகாதேவன் அதற்குச் சரியான ஓர் உதாரணம் தான். கிருஷ்ணன் தூது போவதற்கு முன் பஞ்சபாண்டவர்களை அழைத்து அவர்களின் கருத்தைக் கேட்கிறார்.

"யுத்தம் வேண்டாம் " என்கிறார் தர்மர்.

பீமன், அர்ஜுனன்,நகுலன் ஆகியோர் " யுத்தம் வேண்டும் " என்கிறார்கள்.

அதன்பின் கிருஷ்ணன் சகாதேவனிடம் சென்று " நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்கிறார்.

அதற்கு சகாதேவன் " கிருஷ்ணா, உன்னுடைய கருத்து எதுவோ அதுதான் என்னுடைய கருத்தும் " என்று கூறிவிட்டான்.

சகாதேவனுக்கு, " கண்ணன் விருப்பப்படி தான் எல்லாம் நடக்கப் போகிறது " என்பது தெரியும்.

தான் போருக்கு ஏற்பாடு செய்வது சகாதேவனுக்குப் புரிந்து விட்டது என்பதை கண்ணன் உணர்ந்து கொண்டார்.

" உன் கூந்தலை நானே முடிக்கிறேன்" என்று திரௌபதிக்கு வாக்குக் கொடுத்த கண்ணன், போருக்கு ஏற்பாடு செய்யாமல் இருக்க முடியுமா?

என்றாலும், "பாரதப் போர் நடைபெறாமல் இருக்க என்ன வழி?" என்று சகாதேவனிடம் வினவினார் கண்ணன்.

அதற்கு சகாதேவன் கூறிய பதில் என்ன தெரியுமா?

"பாரதப் போர் நடைபெறாமல் இருக்க வேண்டும் எனில் கர்ணனுக்கு முடி சூட்ட வேண்டும். அதற்கு முன் அர்ஜுனனைக் கொல்ல வேண்டும். பின் திரௌபதியின் கூந்தலை முடிக்க வேண்டும்" என்றான் சகாதேவன்.

கர்ணன்,பஞ்சபாண்டவர்களுக்கு வேண்டாத எத்தனையோ காரியங்களைச் செய்தவன். அப்படியிருந்தும், "கர்ணனுக்கு முடி சூட்ட வேண்டும்" என்று சகா தேவன் ஏன் கூறினான்.

கர்ணனுக்கு முடிசூட்டினால் துரியோதனன் " வேண்டாம் " என்று சொல்ல மாட்டான். அதற்கு தர்மரும் சம்மதிப்பார்.

ஏனென்றால், தர்மரைப் பொறுத்த வரையில் எப்படியோ போர்வராமல் இருந்தால் சரி கர்ணன் தன் தமையன் என்று தெரிந்ததும் அவர் இன்னும் மகிழ்ச்சியடைவார்.

அது சரி...அர்ஜுனனை ஏன் கொல்ல வேண்டும்?

அர்ஜுன்ன கர்ணனின் பரமவிரோதி. அவன் கர்ணனுக்கு முடிசூட்டுவதற்கு சம்மதிக்கமாட்டான். அதனால் அர்ஜுனனை முதலில் கொல்ல வேண்டும்.

சரி...திரௌபதியின் கூந்தலை ஏன் முடிக்க வேண்டும்?

அவள், " என் கூந்தலை முடியமாட்டேன் " என்று சபதம் எடுத்தாள் அல்லவா? அதனால் அவளது சபதத்தை நிறைவேற்ற வேண்டும். இதுதான் சகாதேவன் சொன்ன பதிலுக்கு விளக்கம்.

இப்போது யோசித்துப் பாருங்கள்...

சகாதேவன் நீதியைத் தான் பார்த்தான். தன்பதில்ல் சொந்தபந்தமெல்லாம் எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்பதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை.

ஞானிகள் இப்படித்தான் இருப்பார்கள் என்று அந்த ஆன்மீகச் சொற்பொழிவாளர் குறிப்பிட்டார்.

அவர் சொல்வது சரிதான்... அதற்காகச் சொந்த பந்தங்களைப் பற்றி கவலைப்படாதவர்கள் எல்லாம் ஞானிகள் என்று நாம் நினைத்து விட முடியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான பயிர்ச்செய்கைக்கான விவசாய முறைகள்

**தற்போது நிலவும் வரட்சி காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப் பட்டுள்ளன. இது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவது விவசாயிகளுக்கும் அதனுடன் தொடர்புடையோருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற நோக்கில் இக்கட்டுரை பிரசுரமாக்கப்படுகின்றது.**

வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவும் நிலையில் விவசாயத் தேவைக்கு போதுமான நீரைப்பெற முடியாத நிலை காணப்படுகிறது. இந் நிலையில் விவசாயிகள் 2014 சிறு போகத்தில் வெற்றிகரமான பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான நீரை பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலுள்ளனர். இக் கட்டுரையானது கிடைக்கக் கூடிய நீரினை வினைத்திறனாகவும் விளை பயன் மிக்கதாகவும் பயன்படுத்தி நெல், உப உணவுப்பயிர்கள், மரக்கறிப்பயிர்கள், பழப்பயிர்கள் என்பவற்றை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான விவசாய முறைகள் அல்லது தொழில்நுட்பங்களை பரப்பும் நோக்குடன் வரையப்படுகின்றது.

## அட்டவணை 1: காலபோகம் 2012/2013 மற்றும் 2013/2014 இன் மழைவீழ்ச்சியும் பரம்பலும்

| மாதம் | காலபோகம் (2012/2013) | | | | | | | | | | காலபோகம் (2013/2014) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | யாழ்ப்பாணம் | | கிளிநொச்சி | | முல்லைத்தீவு | | வவுனியா | | மன்னார் | | யாழ்ப்பாணம் | | கிளிநொச்சி | | முல்லைத்தீவு | | வவுனியா | | மன்னார் | |
| | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் | மழைவீழ்ச்சி (mm) | நாட்கள் |
| செப்டெம்பர் | | | | | 110 | 6 | 27 | 3 | 51 | 3 | 100 | 5 | 67 | 3 | 32 | 4 | | | | |
| ஒக்டோபர் | 395 | 18 | 383 | 10 | 588 | 14 | 423 | 16 | 332 | 18 | 82 | 8 | 64 | 4 | 40 | 2 | 198 | 8 | 41 | 3 |
| நவம்பர் | 81 | 8 | 209 | 6 | 192 | 7 | 177 | 16 | 32.1 | 8 | | | 128 | 8 | 154 | 9 | 133 | 14 | 220 | 14 |
| டிசெம்பர் | 234 | 14 | 392 | 14 | 762 | 12 | 600 | 19 | 410 | 19 | 87 | 9 | 211 | 7 | 152 | 5 | 96 | 7 | 181 | 7 |
| ஜனவரி | 152 | 7 | 111 | 3 | 123 | 5 | 109 | 6 | 113 | 3 | | | 181 | 7 | 21 | 5 | 243 | 6 | | |
| பெப்ரவரி | 152 | 9 | 298 | 7 | 316 | 7 | 243 | 6 | 96 | 8 | 23 | 3 | 74 | 4 | 1.3 | 1 | 21 | 4 | | |
| மார்ச் | 117 | 6 | 100 | 4 | 132 | 3 | 168 | | 65 | 4 | | | | | | | 21 | 4 | 21 | 6 |
| மொத்தம் | 1131 | 62 | 1493 | 44 | 2223 | 54 | 1747 | 66 | 1099 | 63 | 292 | 25 | 725 | 33 | 400 | 26 | 712 | 43 | 463 | 30 |

கால போக மழைவீழ்ச்சியின் அளவும் பரம்பலும் அட்டவணை 1 இல் காட்டப் பட்டுள்ளது. காலபோகம் 2012/2013 உடன் ஒப்பிடும் போது 2013/2014 இல் மிகக் குறைந்தள்வு மழைவீழ்ச்சியே பெறப்பட்டுள்ளது. இக் குறைந்த மழைவீழ்ச்சி காரணமாக காலபோகம் 2013/2014 பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு போதுமான நீர் கிடைக்காத காரணத்தால் பயிர்ச்செய்கைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும் கால போகத்தின் முடிவில் இருக்கக்கூடிய நீரின் அளவும் மிகக்குறைந்த மட்டத்தை அடைந்திருந்தது.


2013/2014 காலபோகத்தில் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் கிடைக்கும் இடைப் பருவகால மழைவீழ்ச்சி குறைவாக கிடைத்ததால் நெல் அறுவடையின் பின் மேற் கொள்ளப்படும் இடைக்காலப் பயிர்ச்செய்கையையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

குறைந்த மழைவீழ்ச்சி காரணமாக குளங்களிலும், கிணறுகளிலும் நீர் மட்டம் குறைந்துள்ளது. வரட்சியால் ஏற்படும் பாதிப்புகளை. எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் விவசாயிகள் உள்ளனர். செய்கை பண்ணப்படவுள்ள பயிர்களை வரட்சியில் இருந்து பாதுகாத்து விளைவைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### வரட்சியான சூழ்நிலையில் நெற் செய்கையில் கைக்கொள்ளக்கூடிய விவசாய முறைகள்

**அ) நீர்ப்பாசனவாய்க்கால்களைச் சுத்த மாக்குதல்**

போகம் ஆரம்பிக்கும் முன் பயிர்ச் செய்கைக் கூட்டத்திற்கமைவாக குளங்களில் இருந்து நீர்ப்பாசனம் செய்யும் பிரதான வாய்க்கால்கள் மற்றும் கிளை வாய்க்கால்களை களைகள் இன்றி துப்புரவு செய்து நீரோட்டத்திற்குத் தடையற்ற வகையில் சுத்தமாக வைத்திருப்பதனூடாக நீரைப் பாய்ச்சுவதில் ஏற்படும் இழப்பினை குறைத்தல் வேண்டும்.



துப்பரவு செய்யப்பட்ட வாய்க்கால்கள்

**ஆ) குறைந்த வயதுடைய வர்க்கத்தைப் பயிரிடுதல**

பி.ஜி 250 வர்க்கம் 75 நாட்களில் அறுவடைசெய்யக்கூடியது. நீர்குறைவாக இருக்கும் சிறிய நீர்ப்பாசன குளங்களின் கீழ் இவ் வர்க்கத்தை இருக்கும் நீரினைப் பயன்படுத்தி செய்கை பண்ணுவதன் மூலம் விளைச்சலில் இழப்பின்றி அறுவடையை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 3-31/2 மாத வயதுடைய பிஜி 300, பிஜி 308, பிஜி 358, பிஜி 360 மற்றும் ஏரி 307 நெல் வர்க்கங்களை பயன்படுத்தி நீரை வினைத் திறனாக பயன்படுத்துவதுடன் கூடிய விளைச்சலை பெற முடியும்.

**இ) தரமான உயர்தர விதை பாவித்தல்**

உயர்தர விதை பாவித்துப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதனால்

## அட்டவணை 2: குறைந்த வயதுடைய நெல் வர்க்கங்களும் அவற்றினை பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்களும்

| குறைந்த வயதுடைய (3- $3^{1}/_{2}$மாதம்) கிடைக்கும் இடங்கள் | வர்க்கம் |
|---|---|
| அரச விதை உற்பத்திப் பண்ணை,வவுனியா | பி.ஜி 300, ஏ.ரி 307 |
| அரச விதை உற்பத்திப் பண்ணை,பரந்தன் | பி.ஜி 300,பி.ஜி 358<br>பி.ஜி 308, பி.ஜி 360 |
| சேவா லங்கா பண்ணை, பெரிய குளம், வவுனியா | பி.ஜி 300 |

- களை விதைகள் விதை நெல்லுடன் கலந்து வயலினுள் பயிர்களுடன் நீரிற்காகப் போட்டியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.
- தரமான விதையிலிருந்து உற்பத்தியான நாற்றுக்கள் மிகவும் வீரியமான வளர்ச்சியைக்கொண்டிருப்பதனால் வேர்விருத்தி சிறப்பாக இருக்கும்.
  - ✕ மண்ணில் இருக்கக்கூடிய நீரைப் பயிர் வினைத்திறனாக பயன் படுத்தும்.
  - ✕ வரட்சியைத் தாங்கிப் பயிர் வளரும்.
  - ✕ மட்டம் வெடித்தல், குஞ்சுமுனை அரும்புதல், குடலை விருத்தியடைதல், பூத்தல், முதிர்ச்சி என்பன சரியான நேரத்தில் நிகழும்.


**தரமான விதை நெல்லைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள்**

- வவுனியா மற்றும் கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திடமிருந்து தரமான விதைகளை விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியும்.
- தாம் வைத்திருக்கும் விதை நெல்லைத் தாங்கள் மாவட்டத்திலுள்ள கீழ்வரும் விதை சுத்திகரிக்கும் நிலையங்களில் சுத்திகரித்து தரமான விதை நெல்லைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**நெல்லைச் சுத்திகரிப்பதற்கான உப்பு நீர்ப் பரிகரணம்**

விவசாயிகள் தாம் வைத்திருக்கும் நெல்லைக் கீழ்வரும் முறையில் உப்புநீர்க் கரைசலில் பரிகரித்துதரமான விதை நெல்லைப் பெறமுடியும்.


- 100 லீற்றர் கொள்ளக்கூடிய பரல் ஒன்றை எடுக்கவும்
- பரலினுள் 75 லீற்றர் நீரை நிரப்பவும்
- கறியுப்பைசிறிதுசிறிதாகசேர்க்கவும்
- முட்டைஒன்றை கரைசலில் இடவும்
- 25 சத நாணயக்குற்றி அளவில் முட்டையின் அகலமான பாகம் மேல் நோக்கி படத்தில் காட்டியவாறு மிதக்கும் வரை கறியுப்பை இட்டுக் கரைக்கவும். முட்டை மிதந்ததும் முட்டையை வெளியே எடுக்கவும்.



- பின்னர் நெல்லை இட்டு நன்கு கலக்கவும்
- மிதக்கும் சப்பிகள் அரைவயிறன்கள், களை விதைகள் ஆகியவற்றை அகற்றவும்



- நீரணடியில் அமிழ்ந்திருக்கும் நெல்லை எடுத்து தூய நீரில் 2-3 தடவைகள் கழுவியபின் நிழலில் உலரவிட்டு விதைக்கவும்



**ஈ) போகத்தின் ஆரம்பத்தில் நிலம் பண் படுத்தல்**

போகத்தின் ஆரம்பத்திலேயே நிலத்தைப் பண்படுத்துவதனால் மயிர்த்துளைகள் சிதைவடைந்து நீரானது மயிர்த்துளை விசை மூலம் இழக்கப்படுவதுதவிர்க்கப்படும். அத்துடன் முதலில் பெறப்படும் மழை நீரானது வயலில் தேக்கி வைக்க உதவுவதனால் நீரை வினைத்திறனாக பயன்படுத்த முடியும்.

**உ) உலர் நிலப் பண்படுத்தல்**

முதலாவது உழவுக்குப் பாவிக்கும் நீரை மீதப்படுத்திப் பயிர் பராமரிப்பிற்கு பயன்படுத்த முடியும்.

**ஊ) மாறிமாறி ஈரப்படுத்தலும் உலர்த்துதலும்**

நெற்பயிரில் 12 - 24 மணிநேரம் வரை நீரைத் தேக்கி வைத்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்துவரும் 6-7 நாட்கள் நீர்ப்பாசனம் மேற்கொள்ளத் தேவையில்லை. இவ்வாறு உலரவிடும் போது மண்ணீரம் வயற் கொள்ளளவுக்கு அல்லது வயற்கொள்ளளவு நிலைக்கு அண்மித்ததாக வரும்போது மீண்டும் 12 - 24 மணிநேரம் வரை நீரைத்தேக்கி வைத்து மீண்டும் 6-7 நாட்கள் நீர்ப்பாசனம் மேற்கொள்ளத் தேவையில்லை. இவ்வாறு மாறிமாறி ஈரப் படுத்தியும் உலர்த்தியும் நீர்ப்பாசனம் செய்யும் போது கிடைக்கும் நீரைசிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தமுடியும்.

**எ) இலைமூலம் போசனைச் சத்துக் களை வழங்குதல்**

மண்ணில் போதியளவு ஈரப்பதன் இல்லாத நிலையில் திரவப்பசளை விசுறுவதே பயிருக்கு தேவையான போசனைகளை வழங்குவதற்குறிய ஒரேயொரு வழிமுறையாகும்.

- வுக்சால், பூம்பிளவர் போன்ற இலை மூலம் போசணை வழங்கக் கூடிய திரவப்பசளைகளைப் பயிருக்கு விசுறுவதன் மூலம் பசளைப் பாவனைக்கெனப் பயன்படுத்தப்படும் நீரினளவைக் குறைத்துக்கொள்ளமுடியும்.
- யூரியா, மண்புழுத் திரவம் போன்றவற்றையும் இலைமூலம் வழங்க முடியும்.
- சேவ் பிளஸ்சினை விசிறுவதன் மூலம்இலை மேற்பரப்பினூடான ஆவியுயிர்ப்பைக் குறைத்து நீரிழப்பினை குறைக்கும்
- படி பிளஸ்சினை (Paddy Plus) விசிறுவதன் மூலம் மட்டங்களைத் தோற்றுவிக்கும். மட்டம் வெடித்தல் அதிகரிக்கும்.
- கிறின் மிராக்கில்,ஆவியுயிர்ப்பை குறைத்து நீரிழப்பை தடுக்கும்.

(தொடரும்)

சி.சிவகுமார்
மாகாண கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணசபைக்கு அதிகாரங்கள் வழங்கினால் பிரிவினை வாதத்திற்கே உந்து சக்தியாக அமையும்

## இப்படிக்கூறுகிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

**(கொழும்பு) வடமாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்கினால் அது நாட்டின் பிரிவினைவாதத்திற்கே உந்துசக்தியாக அமையும். எனவே முதலமைச்சர் விக்னேஸ்வரன் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் சம்பந்தியாக இருப்பதால் பிரிவினை வாதத்திற்கான கதவுகளை மூடிவிட முடியாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.**

கசினோ சூதாட்டத்திற்கு சட்ட அங்கீகாரம் கிடைக்காவிட்டால் வெளிநாட்டு "ஹோட்டல்" முதலீட்டாளர்கள் இங்கு வரமாட்டார்களென்றும் குறித்த அமைப்பு தெரிவித்தது.

இதுதொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

இன்று நேற்றல்ல. அமைச்சர் வாசுதேவ நாணயக்கார என்றுமே இலங்கையில் பிரிவினைவாதத்திற்கு துணை போனவர்.

இன்று அவரது மைத்துனர் விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவி வகிப்பதால் வடமாகாண சபைக்கு அனைத்து அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் அதனை மறுப்பது தவறென்றும் சிங்கள அடிப்படைவாதிகளின் சிறைக்கைதியாக அரசாங்கம் சிக்கியிருப்பதாகவும் அமைச்சர் விமர்சிக்கின்றார்.

வடக்கிற்கு அதிகாரங்களை வழங்குவதற்கு நாட்டு மக்கள் மத்தியில் விருப்பம் கிடையாது. இதனை மீறி செயற்பட முடியாது.

அத்தோடு அதிகாரங்களை வழங்கினால் அது பிரிவினையை நோக்கியே முன்னகர்த்தப்படும.

இதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். நாம் அடிப்படைவாதிகள் அல்ல. தேசத்தை நேசிப்பவர்கள் என்பதை அமைச்சர் வாசு புரிந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் அமைச்சராக பதவிவகித்துக்கொண்டு இவ்வாறான கருத்துகளை வெளியிடுவதால் சர்வதேச ரீதியிலான அழுத்தங்களை அதிகரிக்கச் செய்யும்.

அது மட்டுமல்லாது, புலம்பெயர் ஆதரவாளர்களின் நடவடிக்கைகளுக்கும் இது ஊக்கமளிப்பதாக அமையும்.

எனவே, அரச உயர்மட்டம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

கசினோ தொடர்பாக இதற்கு முன்னர் கொண்டு வரப்பட்ட சட்ட மூலத்திற்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்கியது.

ஆனால், அது சார்ந்த ஹோட்டல் வர்த்தமானி அறிவிப்புகளுக்கு இன்று ஹெல உறுமய எதிராக வாக்களித்துள்ளது.

ஏனென்றால் கசினோ சூதாட்டத்திற்கு எதிராக மகாநாயக்கர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதே இதற்குக் காரணமாகும்.

ஹெல உறுமய மட்டுமல்லாது பல அமைச்சர்கள் இவ் விவாதத்தின்போது பாராளுமன்றத்தில் சமுகமளிக்கவும் இல்லை, வாக்களிக்கவும் இல்லை.

மக்களின் எதிர்ப்பு எந்தளவுக்கு உள்ளதென்பதை இதன் மூலம் புரிந்துகொள்ள முடியும்.

அதேவேளை, ஹோட்டல்கள் அமைக்கப்பட்டு நான்கு வருடங்களுக்குப் பின்னரே கசினோ வரும்.

இந்த ஹோட்டல்களுக்கு முதலீடு செய்பவர்கள் கசினோவுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்கா விட்டால் அவர்களும் இங்கு வரமாட்டார்கள்.

எனவே, இத்திட்டம் கேள்விக் குறியோடு காணப்படுகின்றதென்றும் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார். (2)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள போதனாசிரியர்களுக்கான மோல்ட் உருவ பயிற்சி யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் கடந்த 25,26 ஆம் திகதிகளில் வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றும் 30 போதனாசிரியர்களுக்கு நடத்தப்பட்டபோது...

# தமிழர்களைக் கொண்டு தமிழர்களை அழிக்க நடக்கிறது ஆட்சேர்ப்பு

## உறுப்பினர் ரவிகரன் விசனம்

போரின் போது இலட்சக்கணக்கான தமிழர்களைக்கொன்றொழித்து விட்டு தற்போது தமிழர்களைக் கொண்டே தமிழர்களை அழிக்க இராணுவத்தில் தமிழர்களை இணைக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளதாக வடக்கு மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 8 ஆவது அமர்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிவரை கைதடியிலுள்ள மாகாணசபையின் பேரவைச் செயலகத்தில் இடம்பெற்றது. இதில் வடக்கிலுள்ள தமிழ், இளைஞர் யுவதிகளை இராணுவத்தில் இணைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆளும்கட்சி து.ரவிகரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணை குறித்த விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வரை இராணுவத்திற்கு தமிழர்களை இணைக்கவேண்டாம் என்று இந்தச்சபை ஊடாக அரசாங்கத்தை கோருகின்றோம். தமிழர்களுக்கு எதிராக மற்றுமொரு யுத்தத்திற்கு தமிழர்களையே இணைக்கும் சதியில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை இந்த விடயம் குறித்து பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் குறிப்பிடுகையில், பாடசாலை மாணவிகளைக் கூட விடாமல் இராணுவத்தினர் துரத்தித் துரத்தி ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் தமிழ் இளைஞர்களை இணைக்கும் முயற் சியில் அதிகளவில் ஈடுபடவில்லை பெண்களைத்தான் இணைப்பதில் அதிகம் ஈடுபாடு காட்டுகின்றனர்.அது என்ன காரணத்திற்கு என்பது தெரியவில்லை என்று கூறினார்.

இதேவேளை ஆளும்கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் கூறுகையில். உலகத்திலேயே ஆட்டோவில் ஒலிபெருக்கிகளைப்பொருத்தி இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் முயற்சியில் இலங்கை இராணுவத்தினர் தான் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை அநாமதேசயத துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து இந்த நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இது சட்டத்திற்கு முரணானது என்று பல விடயங்களை சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இராணுவ ஆட்சேர்ப்புக்கு எதிராக ஆளும்கட்சி உறுப்பினர் து.ரவிகரனால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.(2-6)

# மேதினத்தில் தமிழின ஜனநாயக அரசியல் பலத்தை காட்டுவோம்

## மேதினத்திற்கு மனோ அழைப்பு



(கொழும்பு)

மே மாதம் முதலாம் திகதி இடம் பெறவுள்ள மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் அணி திரண்டு தமிழின ஜனநாயக அரசியல் பலத்தை எடுத்துக் காட்டுமாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ள கட்சியின் மேதின நிகழ்வுகள் தொடர்பாக விடுத்துள்ள அழைப்பில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

தலைநகர் தமிழர்களின் ஏக தலைமை பிரதிநிதிகளான ஜனநாயக மக்கள் முன்னணியின் மே தின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் அணி திரண்டு வந்து கலந்து கொண்டு தலைநகரில் எங்கள் தமிழின ஜனநாயக அரசியல் பலத்தை எடுத்துக் காட்டுங்கள்.

அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவது, மலையக மக்களின் காணி - வீட்டுரிமை, கொழும்பிலே வீட்டுடைப்பை எதிர்ப்பது, உழைக்கும் மக்களின் உழைப்புக்கேற்ற ஊதியம், இன- மதவாதங்களை எதிர்ப்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நாம் ஒன்று சேர்ந்து குரல் எழுப்பி தலைநகரை அதிர வைப்போம்.

மே முதலாம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் மே தின நிகழ்வுகள் பிற்பகல் 12.30 மணிக்கு ஜிந்துப்பிட்டி வீதி முருகன் ஆலயத்துக்கு எதிரிலிருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமாகும். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### கந்தப்பு நடராசா



வட்டுக்கோட்டைமூளாய் வீதியை பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு நடராசா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### ஆறுமுகம் சரவணபவானந்தன்



காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சரவணபவானந்தன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சிறிசேகரன் பத்மாவதி



புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Peine ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிறிசேகரன் பத்மாவதி கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அகால மரணமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு Krematorium Braunschweig Helmstedter StraBe 38a 38126 Brauns chweig Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் புயல்; சொத்துக்கள் நாசம்

அமெரிக்காவில் வீசிய, கடும் சூறாவளி புயலால், 17 பேர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவின் மத்திய மாகாணங்களான ஆர்கன்சாஸ், டெக்சாஸ், லூசியானா உள்ளிட்ட பல மாகாணங்களில் சூறாவளி புயல் தாக்கியதில், ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன.

ஆர்கன்சாஸ் மாகாணத்தில் மட்டும், எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்து உள்ளனர்.

மரங்களும், மின்கம்பங்களும், சாலையில் விழுந்துள்ளதால், போக்குவரத்து கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளது.

வங்கதேசத்தில் நேற்று முன்தினம் வீசிய புயலில் சிக்கி, 14 பேர் உயிரிழுந்துள்ளனர். நேட்ரோகோனா மாவட்டத்தில், வீசிய புயலால், ஒரு ரயிலின 13 பெட்டிகள் தடம் புரண்டன.

பாலத்தின் மீது சென்ற போது, இந்த விபத்து நடந்தது. ஆனால், ரயில், ஆற்றில் கவிழாமல் தப்பித்தது. இந்த புயல் காரணமாக, அங்குள்ள ஆறுகளில் படகு போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

# ஆஸ்விட்ச் நினைவு ஊர்வலத்தில் உலக யூதர்கள் பலர் பங்கேற்பு

(ஆஸ்விசிம்)

கடந்த 1944 ஆம் ஆண்டில் நாஜித் தலைவர் ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் யூத மக்கள் துன்புறுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

ஹங்கேரியில் இருந்த கிட்டத்தட்ட 4 இலட்சத்து 30 ஆயிரம் யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டு புகையிரதம் மூலம் போலந்தில் இருந்த முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் விஷ வாயு அறைகளில் அடைக்கப்பட்டு உடனடியாக கொல்லப்பட்டார்கள். மற்றவர்கள் கடுமையாக வேலை வாங்கப்பட்டு பசியினாலும், நோயினாலும் உயிர் துறந்தனர்.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற சமயத்தில் இத்தகைய மரண முகாம்களில் ரஷ்யா, இத்தாலி, போலந்து போன்ற பிற நாட்டினர் உட்பட 1.1 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த இனப் படுகொலையை நினைவு கூறும் விதத்தில் கடந்த 1988ஆம் ஆண்டில் போலந்தில் அமைதி ஊர்வலம் தொடங்கியது. ஆண்டுக்கு இரு முறை நடத்தப்பட்ட இந்த ஊர்வலம் பின்னாளில் ஆண்டுக்கு ஒரு முறையாக மாறியது. அந்த வரிசையில் இந்த ஆண்டிற்கான நினைவு ஊர்வலம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் இஸ்ரேல் உட்பட உலகம் முழுவதிலும் இருந்து வந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யூதர்கள் கலந்துகொண்டனர்.

நீல நிற மழை சீருடை அணிந்து வெள்ளை மற்றும் நீல நிறம் கலந்த இஸ்ரேலியக் கொடிகளை அசைத்தவண்ணம் போலந்தில் உள்ள ஆஸ்விட்ச் என்ற இடத்தில் அவர்கள் ஒன்று சேர்ந்தனர்.

முன்னாள் முகாம் இருந்த பகுதியின் வாயில் கதவருகே யூதர்களின் மத சடங்குகளில் ஒலிக்கப்படும் கொம்பின் சத்தம் கேட்டவுடன் இந்த கூட்டத்தினர் அமைதியாக மூன்று கி.மீ தூரத்தில் உள்ள பிர்கெனாவ் வரை ஊர்வலமாக நடந்து சென்றனர்.

இவர்களுடன் உலகப்போர் சமயத்தில் சித்திரவதைகளில் இருந்து உயிர் பிழைத்த சிலரும், போலந்திற்கான இஸ்ரேலியத் தூதுவர் சுவி ராவ் நெர் போன்ற பல முக்கியஸ்தர்களும் உடன் சென்றனர்.

அங்குள்ள நினைவுச் சின்னத்தை ஊர்வலத்தினர் அடைந்ததும் ஹங்கேரியின் ஜனாதிபதி ஜனோஸ அடேர் இறந்தவர்களின் நினைவாக ஒரு உரையாற்றினார்.

அதன்பின்னர் ஊர்வலத்தினர் சிவப்பு செங்கற்களால் அமைக்கப்பட்டிருந்த நினைவு இல்லத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த இறந்தவர்களின் காலணிகள், பெட்டிகள், கண்ணாடிகள் மற்றும் தலைமுடி போன்றவற்றைப் பார்வையிட்டனர்.

இதுநாள் வரை இந்த நினைவு ஊர்வலத்தில் 2 இலட்சம் யூத இளைஞர்கள் பங்கு பெற்றுள்ளதாக சர்வதேச ஊர்வல அமைப்பாளர் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

## ரஷ்யா மீது புதிய பொருளாதார தடை; ஜி - 7 நாடுகளின் தலைவர்கள் தீர்மானம்

உக்ரைன் விவகாரத்தின் எதிரொலியாக ரஷ்யா மீது புதிதாக கூடுதல் பொருளாதார தடைகளை விதிக்க ஜி -7 நாடுகளின் தலைவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒப்புதல் அளித்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆசியா நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், ஜி-7 நாடுகளின் தலைவர்கள் அளித்த ஒப்புதல் அறிக்கையை வெள்ளை மாளிகை வெளியிட்டது.

ஜெனீவா உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள எந்த முழுமையான நடவடிக்கையையும் ரஷ்யா எடுக்கவில்லை.

அதற்கு பதிலாக, பதற்றத்தை அதிகரிக்கும் வகையில் உக்ரைன் எல்லையில் தனது இராணுவத்தை குவித்து வருகிறது.

உக்ரைனில் நிலவி வரும் பதற்றத்தை தணிப்பதற்காக கொண்டு வரப்பட்ட சர்வதேச உடன்படிக்கைக்கு ரஷ்யா இணங்க மறுத்துவிட்டதால் அதனை தண்டிக்கும் நோக்கத்தில் இந்த புதிய பொருளாதார தடைகள் விதிக்கப்படுகின்றன. என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வரும் திங்கட்கிழமைக்குள் இதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா எடுக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் ஜி -7 நாடுகளின் தலைவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதற்கிடையில், உக்ரைனுக்கு சொந்தமான இன்னொரு நகரை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்ய ஆதரவு படைகள் ஈடுபட்டு வருகின்றன.

ஐரோப்பிய யூனியனும் ரஷ்யாவின் 15 நிறுவனங்கள் மீது புதிய பொருளாதார தடை விதித்துள்ளது.

இந்த பொருளாதார தடையால் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா பின் வாங்குமா? அல்லது, மேலும் மூர்க்கத்தனமாக நடந்து கொள்ளுமா? என்பதை சர்வதேச அரசியல் வல்லுநர்கள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.



ஆர்ஜென்டீனாவில் நடந்த அஞ்சலி செலுத்தும் விழாவில் கலந்துகொண்ட அந்நாட்டு வெளியுறவு அமைச்சர போரில் இறந்த வீரர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்துவதை படத்தில் காணலாம்.

## எகிப்தில் 683 பேருக்கு மரண தண்டனை



(கெய்ரோ)

எகிப்தில் ஜனாதிபதி முகமது மோர்ஸி பதவி விலகியதைத் தொடர்ந்து அந்நாட்டில் நிலவி வரும் குழப்பங்களுக்கு இடையே 683 பேருக்கு மரண தண்டனை விதித்து கெய்ரோ நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் கடந்த ஓகஸ்ட் 14 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி முகமது மோர்ஸியை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரி அவரது ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர்.

அப்போது, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும்இடையே மோதல் ஏற்பட்டதில்நிகழ்ந்த கொலைகள்குறித்தும், தெற்கு முன்யா மாகாணத்தில் பொலிஸ்காரர் ஒருவரைக் கொல்ல முயன்றதாகவும் ஏராளமானோர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்தக் கலவரம் தொடர்பான வழக்கு கெய்ரோ நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது, இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் தலைவர் முகமது பாடீ மற்றும் அவரது ஆதரவாளர்கள் 682 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 50 பேர் ஏற்கனவே சிறையில் இருந்தபடியும், மற்றவர்கள் ஜாமீனில் வெளியே வந்தும் வழக்கு விசாரணைக்கு ஆஜராகி வந்தனர்.

இது தொடர்பான மற்றொரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 529 பேரில் 492 பேருக்கு இதே நீதிமன்றம் கடந்த மாதம் ஏற்கனவே மரண தண்டனை விதித்திருந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முகமது பாடீ பேராசிரியர் ஆவார். 2010 ஆம் ஆண்டில் சகோதரத்துவ அமைப்பை வழிநடத்தி வந்த இவர், எகிப்திய இாணுவத்தால் முகமது மோர்ஸி பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு கடும கண்டனம் தெரிவித்தவராவார்.

எகிப்தில் 1981 முதல் 2011 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்த இராணுவ சர்வாதிகாரியான ஹோஸ்னி முபாரக் மக்கள் புரட்சியால் பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

பின்னர் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற முகமது மோர்ஸி எதிர்ப்பாளர்கள் அளித்த நெருக்கடியால் பதவி இழந்தார்.

அதைத் தொடர்ந்து அந்நாட்டில் அரசியல் குழப்பம் நீடித்து வருகிறது.

## ஈராக்கில் தற்கொலை தாக்குதல்; 57 பேர் பலி!



(பக்தாத்)

ஈராக்கில் தற்கொலைப் படை தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நிகழ்த்திய தாக்குதல்களில் பாதுகாப்புப் படையினர் உட்பட 57 பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக் நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் நேற்று முன்தினம் தங்களது வாக்குகளை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி பக்தாத் மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகளில் அவர்கள் நேற்று முன்தினம் வாக்களித்தனர்.

அப்போது தற்கொலைப் படை தீவிரவாதிகள் 11 பேர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் இராணுவ வீரர்கள், பொலிஸார் உட்பட 42 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதேபோல் ஈராக்கின் பல்வேறு பகுதிகளில் தற்கொலைப்படை தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதல்களில, மேலும் 15 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன் இந்த தாக்குதல்களில் 150 இக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதல்களை சன்னி தீவிரவாத பிரிவினர் நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான மனதால் ஞானம் கிட்டும்போது வாழ்வில் அமைதியும் பூலோக சொர்க்கமும் ஏற்படும்.

*- வால்ட்டேர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புதிதாக ஆலயம் அமைப்பதை தடுத்து நிறுத்தச் சட்டம் தேவை

இலங்கையில் இரண்டு சட்டங்கள் அவசரமாகக் கொண்டு வரப்பட வேண்டும். அதில் ஒன்று மத மாற்றத் தடைச்சட்டம். இரண்டாவது புதிதாக ஆலயங்கள் அமைப்பதை முற்றாகத் தடுக்கும் சட்டம்.

இந்த இரண்டு சட்டங்களும் தேவை என்று கூறும் போது விமர்சனங்களும் ஏற்படவே செய்யும். ஆனால் இந்த நாட்டில் ஒற்றுமை, சமாதானம் என்பன ஏற்பட வேண்டுமாயின் அவரவர் தாம் பிறந்த சமயத்தை பின்பற்றுவது அவசியம்.

இந்து சமயத்தில் பிறந்தவர் கத்தோலிக்க சமயத்தை நாடுவதோ அல்லது கத்தோலிக்க சமயத்தில் பிறந்தவர் இன்னொரு சமயத்தை தேடுவதோ அர்த்தமற்றது.

ஒரு பிள்ளைக்கு தாய் ஒருவர்; தந்தை ஒருவர். இது பிறப்பால் ஏற்பட்ட உறவு. இது போன்றது தான் சமயமும். ஒருவர் எந்தச் சமயத்தில் பிறக்கின்றாரோ அவரது தாய்ச் சமயம் அதுவே. இலங்கையில் பிறந்த தமிழ்க் குழந்தைக்கு தாய்மொழி தமிழ் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். அப்படியால் இப்போது அந்தப் பிள்ளை சிங்கள மொழியே தனது தாய்மொழி என்று கூறினால், அதனை ஏற்றுக் கொள்ள முடியுமா என்ன?

தேவையாயின் தாய்மொழி தவிர்ந்த வேறு எத்தனை மொழிகளையும் ஒருவர் கற்றுக் கொள்ளலாம். அதில் புலமையும் பெறலாம். இன்னொரு மொழி தெரியும் என்பதற்காக, எவரும் தமது தாய்மொழியை மாற்றி விட முடியாது. அது பிறப்பால் ஏற்படுவது.

இது போன்றதுதான் சமயமும். பிறப்பால் ஏற்பட்ட சமய இணைப்பை வேரறுக்கச் செய்வது அடிப்படைப் பண்புகளைச் சீரழிக்கும் செயல் மட்டும்ல்ல; இது மா பாதகச் செயலும் கூட.

எல்லாச் சமயங்களும் அன்பு பற்றியே பேசுகின்றன. எனவே ஒரு சமயத்தை மிஞ்சி இன்னொரு சமயம் உயர்ந்தது என்று சொல்ல முடியாத அளவில் சர்வ மதங்களும் அன்பு, அகிம்சை, தர்மம், நீதி என்ற உயரிய பண்புடைமைகளைச் செப்பி நிற்கின்றன.

அப்படியானால் ஒரு சமயத்தில் இருந்து இன்னொரு சமயத்திற்கு ஆட்களை மதம் மாற்ற வேண்டிய தேவை என்ன? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இந்நிலையில்தான் மதமாற்றத் தடைச் சட்டம் உடனடியாகத் தேவைப்படுகின்றது. இதற்கு அப்பால் இலங்கையின் அபிவிருத்திக்குத் தடை செய்கின்ற காரணிகளில் ஆலயங்கள் மீதான முதலீட்டு முடக்கம் முக்கிய இடத்தைப் பெறுகின்றன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அதிலும் குறிப்பாக வடபுலத்தில் சர்வ மதத்தினரும் தத்தம் ஆலயங்களை நிர்மாணிப்பதில் மிகத் தீவிரம் காட்டுகின்றனர்.

அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் வாழும்போது, பழமை வாய்ந்த- அழகான-எங்கள் வரலாற்றின் பொக்கிஷமாக இருக்கக்கூடிய ஆலயக் கட்டிடங்களை உடைத்து புதிய கட்டிடம் கட்டுகின்ற நடைமுறையானது கடவுள் மீது பக்தி- அன்பு இல்லாதவர்களின் செயலாகவே இருக்க முடியும்.

இது தவிர, புதிது புதிதாகக் கோயில் கட்டுதல் சிறு தெய்வ வழிபாட்டிற்குள் அடக்கப்படும் காவல் தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி ஆலயம் அமைத்து பெருவிழா எடுப்பது என்ற நடைமுறைகள் உட்பட;

கடல், குளம், ஆறு என்பவற்றில் இடப்படும் விக்கிரகங்களை மீள எடுத்து அதற்குப் புதுக் கோவில் கட்டுவது என்ற முறைகளை முற்றாகத் தடுப்பதற்கும் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். இல்லாவிட்டால் வடபுலத்தில் கோவில்கள் இருக்குமே தவிர; வழிபடுவதற்கு, பூசை நடத்துவதற்கு, சுவாமி காவுவதற்கு ஆட்கள் இருக்காது என்பது நிறுத்திட்டமான உண்மை.

ஆகையால் எந்த மதத்தினரும் புதிதாக ஆலயம் அமைப்பதைத் தடுக்கும் சட்டமும் தேவையே.

# சமய முரண்பாடுகளை நீக்குவதற்கு தற்போதைய சட்டங்கள் போதுமானது

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

சமய முரண்பாடுகளை களைவதற்கு ஏற்கெனவே அமுலில் உள்ள சட்டங்கள் போதுமானது என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். தனியாக பொலிஸ் பிரிவு ஒன்றை அமைத்து சமய முரண்பாடுகளைக் களைய வேண்டி அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய பொலிஸ் குழு எந்தவொரு சேனாவையோ அல்லது மதக் குழுவினையோ பாதுகாக்க முயற்சிக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வாதிகார ஆட்சி நடக்கும் நாடுகளில் உள்ள மக்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். நாட்டில் சர்வாதிகாரக் கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் அதற்கு எதிராகவே ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏதேனும் அமைப்பு அல்லது இயக்கங்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண நாட்டில் சட்டங்கள் காணப்படுகின்றன. பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு.

ஏதேனும் ஓர் சம்பவம் இடம் பெறும்போது அதற்கு தீர்வு காண அரசியல் நோக்கத்துடன் பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டால், பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது.

ஒவ்வொரு சேனாக்களையும் பாதுகாப்பதற்காக பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டால் அதில் பயனில்லை. அதன் மூலம் மத நல்லிணக்கம் ஒருபோதும் ஏற்படப் போவதில்லை.

நாட்டில் தற்போது உள்ள சட்டங்களை பொலிஸார் உரிய முறையில் அமுல்படுத்தினாலேயே பிரச்சினைகள் ஏற்படுவதனை தடுக்க முடியும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (2)

# குற்றவாளிகள் 7 பேருக்கு மரண தண்டனை விதிப்பு

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டம், வலப்பனை, பிரதேசத்தில் இடம்பெற்ற கொலை சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற இந்த கொலை சம்பவம் தொடர்பில் 09 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்ததுடன், வழக்கு விசாரணைகள் மிக நீண்ட காலமாக நடந்து வந்தது.

மேற்படி வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் வழக்கு விசாரணை நடத்தப்பட்ட காலப் பகுதியில் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், எஞ்சிய 7 பேருக்கு எதிராக நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க குற்றவாளிகளுக்கு எதிராக இந்த மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 5 பேர் இரண்டு குடும்பங்களை சேர்ந்த சகோதரர்கள் என தெரியவருகிறது. (2)

## ஸ்ரீ சிந்தாமணி ஆலய மகோற்சவம்

(வவுனியா)

வவுனியா வெளிவட்ட வீதி அருள் மிகு ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் மே மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள்இடம்பெறும்.

இதற்கமைய மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேட்டைத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை சப்பறத்திருவிழாவும் இடம் பெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு திருவூஞ்சல் கொடியிறக்கமும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

## ரவூப் ஹக்கீம் மலேசியா பயணமானார்

### பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சென்றுள்ளார்.

ரவூப் ஹக்கீமை கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் அந்நாட்டுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகர் இப்ராஹிம் அன்ஸார் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் வரவேற்றனர்.

இன்று புதன்கிழமை உம்னோ என்றழைக்கப்படும் ஐக்கிய மலேசிய தேசிய அமைப்பின் செயலாளர் நாயகம் தாத்தோ தெங்கு அதனான், அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான பரஸ்பர கலந்துரையாடலொன்றும் நடைபெறவுள்ளது.

[illegible] அங்கு சென்றுள்ளார். (2)

# மஞ்சள் காவியுடைக்கும் ஜிப்பாவுக்கும் பொருந்தும் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)


மஞ்சள் காவியுடைக்கும் ஜிப்பாவுக்கும் பொருந்தும் வகையிலான ஒரே சட்டம் நாட்டில் அமுலில் இருக்க வேண்டும் என தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அவர், இந்தப் பொலிஸ விசாரணைப் பிரிவானது மத விவகார பொலிஸார் உருவாவதற்கு வழிசமைக்கும் என்று குறிப்பிட்டதுடன் சமய முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக பொலிஸ் பிரிவொன்றை உருவாக்கியுள்ளமையானது இந்தப் பிரச்சினைக்கு சிறந்தவொரு தீர்வாக அமையாது. இந்த பொலிஸ் பிரிவினால் சமய முரண்பாடுகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடியாது என்றார்.

இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாத வகையில் மஞ்சள் காவியுடைகக்கும் ஜிப்பாவுக்கும் பொருந்தும் வகையிலான ஒரே சட்டம் நாட்டில் அமுலில் இருக்க வேண்டும் என அமைச்சர் மேலும் கூறினார். (2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## குன்றாத அன்பு வேண்டும்



✦ பெண்ணாசையிலும், பொன்னாசையிலும் மனத்தை அலையவிட்டு நாமத்தை மாத்திரம் நாவால் உச்சரிப்பதால் என்ன பலன்?

✦ தெரிந்தோ, தெரியாமலோ, தன்னறிவுடனோ, அறிவில்லாமலேயோ எந்த ஸ்திதியிலாகட்டும், ஒருவன் பகவந்நாமத்தை சொல்வானானால் அவனுக்கு அதன் பலன் கிட்டும். தானாகவே விரும்பி ஆற்றுக்குப் போய்க் குளிப்பவனுக்கும், வேறொருவனால் ஆற்றில் தள்ளப்படுபவனுக்கும் அல்லது தூங்கும்போது வேறொருவன் கொட்டிய தண்ணீரில் நனைபவனுக்கும் ஸ்நான பலன் ஒருங்கே ஏற்படுகிறது அல்லவா?

✦ பக்தி வேண்டும் குன்றாத அன்பு வேண்டும் அநித்யப் பொருள்களான பொன், புகழ், போகம் இவைகளிலுள்ள பற்றுதல் அகல வேண்டும்.

✦ பக்தியுடன் பகவந் நாமத்தைப் பாடு. அப்போது மலைபோலக் குவிந்திருக்கும் உனது பாவங்கள் எல்லாம் நெருப்புப் பொறி ஒன்றினால் மலைபோலக் குவிந்த பஞ்சுப்பொதிகள் எரிந்து சாம்பலாவதைப் போல் நசித்துப் போய்விடும்.

✦ உலக வாழ்க்கையினர் செய்யும் பக்தி சாதனைகள் தற்காலிகமேயாம். அவைகள் நிலையான அடையாளங்களை உண்டாக்குவது இல்லை.

✦ சாந்தமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு பகவந்நாமத்தை மவுனமாக உச்சரிப்பதுதான் ஜபம். ஏகாக்ர சித்தத்துடன் ஒருவன் ஜபம் செய்வானானால் அவன் நிச்சயமாக ஈஸ்வரனை அடைவான்.

✦ கைகளினால் தாளம் போட்டுக்கொண்டே இனிமையான ஹரிநாம சங்கீர்த்தனம் செய் இவ்வாறு செய்தால், உன் மனத்திலுள்ள தீய சிந்தனைகள் எல்லாம் அகன்றுவிடும்.

✦ அதைரியம், துவேஷம், பயம் இவைகள் குடி கொண்டிருக்கும் இடத்திற்கு ஈஸ்வரன் வருவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அணியில் யாழ். வீரர் வாகீசன்



தென்கிழக்காசிய கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த வீரரொருவரும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி வீதியைச் சேர்ந்த சண்முகசுந்தரலிங்கம் தம்பதிகளின் புதல்வனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனாகிய சண்முக சுந்தரலிங்கம் வாகீசன் இலங்கை கூடைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவாகியுள்ளார்.

மேலும் வரும் 12 ஆம் திகதி தென்கிழக்காசிய கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ள நேபால் நோக்கி இவர் பயணமாகவுள்ளார். (க-23)

### யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான

# பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி; வயாவிளான் மத்திய ம.வித்தி. சம்பியன்





யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் 15 வயதுப் பிரிவு அணியினர் சம்பியனாகியதுடன் 17 வயதுப் பிரிவினர் இரண்டாமிடத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இப் போட்டிகள் இடம்பெற்றன. 15 வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி மோதியது.

இதில் 25:9 25:12 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற் கணக்கில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. இவ் அணி காலிறுதியாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலயத்தையும் அரையிறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியையும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருந்தது.

17 வயதுப் பிரிவு அணியினர் அரையிறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்தில் ஆவரங்கால் நடராஜா ராமலிங்க வித்தியாலய அணியிடம் தோல்வியடைந்து இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (க-23)

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண கரப்பந்து; கரவெட்டி பிரதேச செயலகம் சம்பியன்



யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய அரச அதிபர் வெற்றிக்கிண்ண 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய அரச அதிபர் வெற்றிக்கிண்ண 2013 ஆம் ஆண்டுக்கான போட்டிகளின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பும் அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணியும் யாழ்.மாவட்ட செயலக அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இடம் பெற்ற போட்டியில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றன.

முதல் செட்டை யாழ்.மாவட்ட செயலக அணி கைப்பற்றியது.

எனினும் சுதாகரித்து ஆடிய கரவெட்டி பிரதேச செயலக அணி அடுத்த இரண்டு செட்களையும் கைப்பற்றியது.

இதனால் இப் போட்டியில் 2:1 என்னும் செட் கணக்கில் கரவெட்டி பிரதேச செயலக அணி யாழ்.மாவட்ட செயலக அணியை வென்று யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய அரச அதிபர் வெற்றிக் கிண்ண 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகியது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

தாவடி றெயில் றைடர்ஸ் விளையாட்டுக் கழகம் 18 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையே கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது.


இப் போட்டிகள் நாளை முதலாம் திகதி காலை 9 மணி முதல் தாவடி அம்பலவாணர் முருகமூர்த்தி ஆலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.


இப் போட்டிகளில் 18 வயதிற்குட்பட்ட அணிகள் மட்டுமே பங்குகொள்ள முடியும் என்பதுடன், போட்டியின் போது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் அவசியமாகும்.

போட்டிகள் அணிக்கு 7 பேர் 6 ஓவர் கொண்டவையாக இடம்பெறவுள்ளது.

பதிவுகளை மேற்கொள்வதற்கும் மேலதிக விபரங்களிற்கும் 077 78 18 108 என்னும் இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-23)







சாவகச்சேரி நகராட்சி மன்றமும் சாவகச்சேரி பொலிஸ் நிலையமும் இணைந்து புதுவருடத்தை முன்னிட்டு நடத்திய விளையாட்டுப் போட்டி சாவகச்சேரி நகராட்சி மன்ற விளையாட்டு மைதானத்தில் சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. கே.டி.வன்னியராட்சி ஆகியோர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இப் போட்டியில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மங்கல விளக்கேற்றுவதையும் பிராந்திய உள்ளூராட்சி உதவியாளர் கொ.ஜக்சில் வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும் வெற்றி பெற்ற அணியுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுப்பர் ஓவரில் கொல்கத்தாவை வீழ்த்தி ராஜஸ்தான் திரில் வெற்றி

பரபரப்பான சுப்பர் ஓவரில் கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி திரில் வெற்றி பெற்றது. 7-வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்து வருகிறது. இந்த நிலையில் அபுதாபியில் நேற்று 19-வது லீக் ஆட்டத்தில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ்-ஷேன் வோட்சன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது. இதன்படி முதலில் களம் இறங்கிய ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 152 ஓட்டங்களை குவித்தது.





அந்த அணியில் அதிகபட்சமாக ரகானே 59 பந்துகளில் 72 ஓட்டங்கள் குவித்தார். கொல்கத்தா அணி தரப்பில் வினய் குமார் 30 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதையடுத்து கொல்கத்தா அணிக்கு 153 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 153 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 152 ஓட்டங்களினை எடுத்தது.

இதனால் போட்டி சுப்பர் ஓவராக நிர்ணயிக்கப்பட்டது.

சுப்பர் ஓவரில் முதலாவதாக துடுப் பெடுத்தாடிய கொல்கத்தா அணி 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 11 ஓட்டங்களை எடுத்தது.

சுப்பர் ஓவரில் 12 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்று களமிறங்கிய ராஜஸ்தான் அணி சுப்பர் ஓவரில் 11 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது.

கிரிக்கெட் விதிப்படி சுப்பர் ஓவரிலும் போட்டி சமனிலையில் முடிவடைந்தால எவ்வணி அதிகபட்சமாக பவுண்டரி பெற்றுக் கொண்டதோ அவ்வணிக்கே வெற்றி வழங்கப்படும்.

அவ்வகையில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக 2 ஓவர்களில் 11 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களை கைப்பற்றிய ராஜஸ்தான் அணியின் ஜேம்ஸ் போல்க்னர் தெரிவானார். (க)




## அரசியல் தலைவர்களை...

பாதுகாப்புப் படையினரால் தேடப்பட்டு வந்த கோபி என்றழைக்கப்படும் செல்வநாயகம் கஜீபன் மற்றும் தேவியன் என்றழைக்கப்படும் சுந்தரலிங்கம் கஜீபன் ஆகிய இருவர் உட்பட, மூன்றுபேர் இலங்கையின் வடக்கே வவுனியா மாவட்டம் நெடுங்கேணி பிரதேசத்தில் அண்மையில் இரவு வேளை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் இப்போதைய உயர் மட்ட உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்பட்ட இவர்கள் இராணுவத்தினர் மேற்கொண்டிருந்த சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கையொன்றில் இருந்து தப்பிச் செல்ல முற்பட்டபோது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்திலேயே கொல்லப்பட்டிருப்பதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் ஊடாக பிரதானிகளுக்கு விளக்கமளித்த பேராசிரியர் ரொஹான் குணரட்ண மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தப்போதைய புலித்தலைவர்கள் என சந்தேகிக்கப்பட்ட மூவரும் விடுதலைப் புலிகளை மீண்டும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இவர்களில் கோபி முக்கிய நபர். தன்னைத் தேடிச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பி ஓடியவர்.

இவருடன் தொடர்புகளை பேணியவர்களை தற்போது விசாரணைக்கு உட்படுத்தி வருகிறோம். இப்புலனாய்வு விசாரணைகளினால் தான் கோபியும் அவரது சகாக்களும் நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களை படுகொலை செய்ய திட்டம் தீட்டியமை தெரியவந்துள்ளது.

மேலும் தேவியன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உத்தரவுக்கு அமைய தமிழகத்திற்கு தப்பிச் சென்றவர். பின் போர் முடிவடைந்த பின்னர் தலைமறைவாக நாடு திரும்பியுள்ளார்.

புலனாய்வுப் பிரிவு உறுப்பினரான இவர் விமானங்கள் தொடர்பிலான நிபுணத்துவ அறிவைக் கொண்டவர்.

அத்தோடு தேவியன் தமிழகத்தில் யார் யாருடன் தொடர்புகளைப் பேணினார் என்பதை அந்த நாட்டு அரசு விசாரணை செய்ய வேண்டியது அவசியமானது எனவும் ரொஹான் குணரட்ன தெரிவித்தார். (செ-11)

## முன்.போராளி...

மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றுவதற்கென 16 பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை அமைக்கப்பட்ட நாள் தொடக்கம் எங்களைச் சந்திக்க வருபவர்களில் பெரும்பாலானவர்கள் தொழில்வாய்ப்புக் கேட்டே வருகின்றனர். அந்த அளவுக்கு வேலையில்லாப் பிரச்சினை இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. இவர்களிலும் முன்னாள் போராளிகள் அதிகம் சிரமப்படுகின்றனர்.

முன்னாள் போராளிகளில் பெரும்பாலானவர்கள் கல்வியை இடைநிறுத்திக் கொண்டவர்கள். இவர்களிடம் கல்விச் சான்றிதழ்கள இல்லாததால் இன்று அரச சேவைகளில் அவர்களால் தொழில்வாய்ப்பைப் பெறமுடியாமல் உள்ளது. போராளிகளாகப் போகாமல் இருந்திருந்தால் இவர்களும் ஏனையவர்களைப் போல உயர்கல்வியை முடித்து இன்று பொறியியலாளர்களாகவோ, மருத்துவர்களாகவோ, ஆசிரியர்களாக கூட வந்திருப்பார்கள். ஆனால், எங்களின் விடுதலைக்காக என்று புறப்பட்டுத் தங்கள் கல்வியைத் தியாகம் செய்தவர்களை இன்று பயத்தின் காரணமாக எமது சமூகமே அரவணைக்கத் தயங்குகிறது.

முறைசார் கல்வித் தகைமையைப் பெறாவிட்டாலும், இவர்களில் பெரும்பாலானவர்கள போராளிகளாக இருந்த காலத்தில் பல்வேறு தொழில் துறைகளில் பயிற்சி பெற்றவர்களாகவே உள்ளார்கள். எனவே, தனியார் துறையினராவது நடுத்தெருவில் விடப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்குத் தொழில் வாய்ப்பில் முன்னுரிமை வழங்க முன்வரவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறுவருக்கும், கால்நடைப் பண்ணைப் பணியாளர்கள் நால்வருக்கும், நீர்ப்பாசனத் திணைக்களப் பராமரிப்புப் பணியாளர்கள் அறுவருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. விவசாய அமைச்சின், செயலாளர் யு.எல்.எம். ஹால்தின், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் சோ.சிவபாதம், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசீகரன், வடமாகாண சபை உறுப்பினர்கள், ஆர்னல்ட் மற்றும் விந்தன் கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கினார்கள். (செ-6ஶ்ரீ)

## வீதியில் வெளி...

கோவில் திருவிழாவுக்கு கூடும் மக்கள் போன்று குறுகிய நேரத்துக்குள் பல நூற்றுக் கணக்கான மக்கள் திரண்டனர்.

வீதியின் கீழ் நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கும் குழாயில் ஏற்பட்ட வெடிப்பின் ஊடாக நீர் வெளிப்படுவதைக்கூட புரிந்துகொள்ளாத பலர் அதிசயமாக அந்தச் சம்பவத்தை நோக்கியதோடு தெய்வ அருளால் நிகழ்ந்திருக்க கூடும் என்று நினைத்து வீதியில் வெளிப்பட்ட நீரை பக்தியுடன் தமது கைகளில் எடுத்து கண்களில் ஒத்திக்கொண்டதோடு தலைகளிலும் தடவிச்சென்றனர். இதேவேளை சிலர் அந்நீரை அருந்தியும் பார்த்தனர்.

காப்பெற்வீதியில் வெளிப்பட்ட நீர் ஊற்று போன்று வெளிப்பட்டு ஓடியதைக்காண அப்பகுதியில் மக்கள் திரண்டதனால் அவ் வீதியின் ஊடான போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டதோடு வாகனங்களும் வீதியின் ஓரமாக அதிகளவில் தரித்து நின்றதனால சிறுசிறு விபத்துக்களும் இடம்பெற்றன.

இதேவேளை குறித்த வீதி ஊடான போக்குவரத்து பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கருதிய பொலிஸார் அவ்வீதியூடான போக்குவரத்தை முற்றாக தடை செய்தனர்.

இது இவ்வாறு இருக்கையில், வீதிக்கு காப்பெற் போடும் சீனா நாட்டின் நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதியினால் யாழ்.மாநகரசபையிடன் 2 கோடி ரூபா நட்ட ஈடு பெற்றுத்தர வேணடும் என்றுகோரி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று மாலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மருதனார் மடம் ஆஞ்சநேயர் ஆலய வளாகத்திலுள்ள பிரமாண்டமான ஆஞ்சநேயர் சிலையிலிருந்து அண்மையில் நீர் வடிந்தோடியமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## ஐ.நா. தீர்மானத்தில்...

வரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தண்டாயுதபானி ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இதனையடுத்து ஐ.நா மனித உரிமைப் பேரவையின் இலங்கை அரசிற்கு எதிரான தீர்மானமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடப்பாடுகளும், அடுத்து உண்மைகளை கண்டறிதல் என்ற விடயத்தின் கீழ் தமிழர் தாயகத்தில் தமிழ்மக்களின் குடிப்பரம்பலும் ஆக்கிரமிப்புக்குள்ளான தமிழர் நிலங்களும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்கள், பிரச்சினைகள் தீர்வுகள் பற்றியும் ஆராயப்படவுள்ளது.

இதனைவிட கிழக்கு மாகாண சபை மற்றும் அங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களின செயற்பாடுகள், வடக்கு மாகாண சபை மற்றும் இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் பற்றியும் ஆராயப்படவுள்ள தாக மாவை சேனாதிராஜாவினால் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## பெண் வேடத்தில்...

தைச் சேர்ந்த 28 வயதான ஜெயபாலன் ஸ்டென்லி ரமேஸ் என்ற இந்த சந்தேகநபர், வவுனியா, குட்செட் பிரதேசத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவலை அடுத்தே இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகவும் இவர் கைது செய்யப்படும் போது சிவப்பு நிற சுடிதார் அணிந்து பொய் முடியிட்டு தொப்பி அணிந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்களை வைத்திருந்தார், கொள்ளைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் இம்மாதம் முதலாம் திகதி, சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், கடந்த 20ஆம் திகதி இரவு 11 மணியளவில், இவர் வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றிருந்தார் என அறிவித்த பொலிஸார் இவரைக் கைது செய்வதற்கான தேடுதல்களை நடத்துவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


# சேவைநலன் பாராட்டு

## திரு.செல்லத்துரை ஆனந்தகுமார் (S.L.T.S-I)



பிறந்த திகதி 20.02.1957

02.01.1984-28.05.1986
வ/பட்டடை பிரிந்தகுளம்
29.05.1986-11.01.1987
வ/சின்னப் பூவரசங்குளம்
12.01.1987-30.04.1991
களு/குளோடன் அ.த.க பாடசாலை
01.05.1991-30.09.1991
யா/சுழிபுரம்கிழக்குஅ.மி.த.கபாடசாலை
01.10.1991-09.07.2003
யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
10.07.2003-11.07.2004
யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம்
12.07.2004-இன்றுவரை
யா/திருவடிநிலை சை.த.க பாடசாலை,
யா/சின்னம்மா வித்தியாசாலை

ஓய்வுக் காலத்தை மகிழ்வாகக் களிக்க உளமார வாழ்த்தும்

யா/திருவடிநிலை சை.த.க பாடசாலை,
ஆசிரியர் கழகம்

ஜி-7224


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப மருத்துவ காப்புறுதித் திட்டம்
இங்கு காட்டப்பட்டிருக்கும் (Expo marketing) குடும்ப மருத்துவ காப்புறுதி அட்டை விநியோகித்தல் நிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் எவரும் கொள்வனவு செய்ய வேண்டாமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 24.04.2014 க்கு பின்பு கொள்வனவு செய்யப்படும் அட்டைகளுக்கு நொதன் சென்றல் வைத்தியசாலை பொறுப் பல்ல என்பதை அறியத் தருகின்றோம்
(C-7220)

திருமுருகன் கொம் நெற்
மிகக் குறைந்த கட்டணத்தில் 220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால்கள், பொதிகள் சேவை
அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
3 -5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
* அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்.
* கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை.
WESTERN UNION | MMBL Money Master
வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள
இல. 271 A. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். [ஆஸ் சிலோனிந்து முன்பாக] தொ.பே: 021 222 7835
பிரதான கிளைகள் :
இல. 18,பிரதான வீதி நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
பிரதான வீதி, சங்கானை.
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(C-7214)

# காணாமல்போன விமான...

இந்த ரோபோ 14 முறை நீருக்குள் சென்று தகவல்களை சேகரித்து வந்தது. எனினும் விமானம் குறித்தோ, அதன் கறுப்பு பெட்டியை குறித்தோ எந்த தகவலும கிடைக்கவில்லை.

இந்த நிலையில் விமானத்தை தேடும் பணி நடைபெறும் பகுதியில் மோசமான வானிலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் தொடங் கப்பட்டது. விமானம் குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் இந்திய பெருங்கடலில விமானத்தை தேடும் பகுதியில் இருந்து சுமார் 5ஆயிரம் கிலோமீட்டர் தொலைவில் விமானத்தின் உடைந்த பாகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவின் கடலாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட்டை தலைமையமாக கொண்டு செயல் படும் கடலாய்வு நிறுவன கூறுகையில்,

நிறுவனம் கடந்த மார்ச் 10-ம் திகதியில விமானத்தை தனியாக தேடிவந்ததாக தெரிவித்துள்ளது.

மேலும், இந்திய பெருங்கடலில் விமானத்தை தேடும் பகுதியில் இருந்து சுமார் 5ஆயிரம் கிலோ மீட்டர தொலைவில் மாயமான மலேசிய விமானத்தின் உடைந்த பாகங்கள் என்று நம் பக்கூடிய பொருட்களை கண்டுபிடித்துள்ளதாக தெரிவித்துள்ளது என்று ஸ்டார் செய்தி நிறுவன தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடலாய்வு நிறுவனம் சுமார் 2,000,000 சதுர கிலோ மீட்டர் பகுதியில் தேடியுள்ளது.

செயற்கைக் கோள் மற்றும் விமானங்கள் எடுத்த புகைப்படங்களை கொண்டு, விமானம் கடைசியாக பயணித்த இடத்திற்கு வடக்கே 20க்கும் மேற்பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, நிறுவனத்தின் விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர் என்று கடலாய்வு நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் டேவிட் போபி கூறியுள்ளார்.

அணு ஆயுதங்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பல்களை கண்டுபிடிக்க பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்களை கடலாய்வு நிறுவ[னம்] படுத்தியதாக அவர் கூறியுள்ளார்.

மாயமான மலேசிய விமானம் மாயமான மூன்று நாட்களுக்கு முன்னர் மார்ச் 5ஆம் திகதி நிறுவனம் கடல்பரப்பில் எடுத்த படத்[தில்] எதுவும் காணப்படவில்லை.

விமானம் காணாமல் போ[வ]தற்கு முன்னதாக உடைந்த பாகங்கள் எதுவும் இல்லை.

இது மாய மான விமானத்தி[ன்] உடைந்த பாகம் என்று நாங்கள் உறுதியாக சொல்ல முடியவில்லை.

ஆனால் எந்த கோணத்திலும் ஆய்வு செய்ய வேண்டும் என்று டேவிட் கூறியுள்ளார்.

இதேவேளை, மலேசிய சிவில் விமான போக்குவரத்து அதிகாரி ஜெனரல் அசாருதீன் அப்துல் ரகுமான் நாங்கள் இந்த தகவலை ஆய்வு செய்வோம் என்று கூறியுள்ளார். (செ-11)

Architectural CAD Centre
Mathavady lane-Kondavil
Contact No:071 8617972
Civil Mech.
Auto CAD
2D-Drawing and 3D-Modeling
Lecturer By:K.N.Mugunthan(D.A)
Cert.Auto CAD 2D-Drawing
Cert.Advanced 3D-Modelling in Auto CAD
University of Peratheniya + University of Moratuwa
(C-7222)

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் (O/L), (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : M.Rajan -0772286054
(6253)

# 81 மனித எலும்...

சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இத் தகவலை மன்னார் பொது வைத்தியசாலை தரப்பினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் தலைமையில் நேற்று காலை 10 மணியளவில் மனனார் பொது வைத்திய சாலைக்குச் சென்ற அனுராதபுர மாவட்ட சட்ட வைத்திய நிபுணர் வைத்தியர் டி.எல்.வைத்தியரெட்ன தலைமையிலான குழுவினர் குறித்த 81 எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்களை மன்னார் வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து மீட்டு அனுராதபுரம் கொண்டு சென்றுள்ளனர்.

இவர்களுடன் விசேட குற்றப்புலனாய்வு பிரிவினரும் மன்னார் வைத்தியசாலையில் பிரசன்னமாகியிருந்தனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி வரை குறித்த திருக்கேதீஸ் வரம் மனித புதை குழியில் இருந்து 81 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் மீட்கப்பட்டு 81 பெட்டிகளில் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற் கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாகவைக் கப்பட்டிருந்தமை குறிபிடத்தக்கது. (செ-11)

BRITISH COLLEGE OF ENGLISH
IELTS
BRITISH COUNCIL
IELTS Registration Centre For British Council
July- 10 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்.
Unique Features
* Class Work with individual attention
* Guaranteed results to achieve high band scores
* Free access to English Language Centre
* Free use of latest IELTS Materials
* Course Conducted by University Lecturers who have undergone IELTS Teacher preparation Courses at the British Council
Course duration Commencement
Saturday - Sunday 8.30 a.m - 11.30 a.m
Mou - Tues - 7.00a.m 8.30 a.m
Wed - Thurs 3.00 p.m 5.00 p.m
10 Weeks
03.05.2014
வகுப்புக்கள் - 03.05.2014 ஆரம்பம் (C-7211)
BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக) Tel: 0778803887

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
விசேட கட்டண சலுகைகள்
- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-7217)

அக்ஷய திருதியை நன்நாளில் தங்க நகைகளை வாங்கிட ராசியான தங்க மாளிகைக்கு வாரீர் வாரீர்
யாரேனும் சங்கானையில் நகை வாங்க வந்தால் பாரெங்கும் அவர்கள் நாவில் பேசப்படுவது
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
வியாழக்கிழமை (01-05-2014) அன்று அக்ஷய திருதியை தினத்தை முன்னிட்டு விசேட கழிவுகளுடன் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்
K.T. பிளாசா, பிரதான வீதி, சங்கானை. தொ.பே: 021 321 2399
குறிப்பு: தங்கநகை வாங்குபவர்களுக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும். தங்க நகை ஓடர் தருபவர்களுக்கு தங்க நாணயப் பரிசில்கள் வழங்கப்படும்.
(C-7208)

எமது நிறுவனத்தின் மூலம் வெற்றிபெற்ற விசாக்களையும், எம்மால் வெற்றியடைய முடியாத விசாக்களையும் நேரில் ஆய்வு செய்தபின் மீதியைப் பேசிக்கொள்ளலாம்.
- ஆஸ்திரேலியாக் குடும்ப விசா - 54 வயதுக்குட்பட்டவர்கள் முயற்சிக்கலாம்
- நியூசிலாந்து IELTS தேவையில்லை. 2 வருடத்தில் PR பெறலாம்
- ஐரோப்பிய நாடான சைப்பிரசில் ஆண் / பெண் படிக்க உழைக்க 4 வருட விசா வெறும் 5 இலட்சம்
- மலேசியாவில் (விசிற் விசாவில் அல்ல) படிக்கும் அல்லது உழைக்கும் விசாவில் செல்ல வெறும் 5 இலட்சம்
விசாவெற்றி பெறுவது என்பது அந்தந்த நாடுகளின் விசா அலுவலரின் ஆதிக்க வரம்பினுள் அமையும் விடயமாகும். இதனால் விசா வெற்றிபெறுவது தொடர்பான உத்தரவாதம் எம்மால் தரமுடியாதுள்ளது.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P :- 021 221 9016, 021 499 3502
(C-7223)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.